செந்தமிழ்ச் செல்வி



சிலம்பு-௫௮ தி. வ. ஆண்டு-௨௦௧௪. ஐப்பசி பரல்-௧

நவம்பர் 1983

"செந்தமிழ்ச் செல்வி"

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. முனைவர் ச. வே. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎச்.டி.
இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், சென்னை.

உ முனைவர் தமிழண்ணல், பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

ங பேராசிரியர் ச அகத்தியலிங்கம், தமிழ்த்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

ச. முனைவர் பொன் சௌரிராசன், தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

ரு முனைவர் பொன் கோதண்டராமன், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

சு முனைவர் கு. பரமசிவம், எம். ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர் அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

எ பேராசிரியர் கு சுந்தரமூர்த்தி, எம். ஏ
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

அ. முனைவர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ.,டிப்.லிங்., பிஎச்.டி.,
மயிலாடுதுறை.

கூ கழக இலக்கியச் செம்மல் புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

க0 முனைவர் வீ. ப. கா. சுந்தரம், தமிழியல்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

நிறுவனர்: தாமரைச்செல்வர் வ. சுப்பையா.

ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிட்.

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௫௮ தி. வ. ஆண்டு உ0கச, ஐப்பசி பரல்-௩

நவம்பர் 1983

தென்னாடுடைய சிவன்

சைவ சமயமே முழுமுதற் சமயம், சிவபெருமானே முழுமுதற் கடவுள். இந்திய நாட்டின் தென் பகுதியில் இச்சமயம் தோன்றி இதுகாறும் வழக்கிலிருப்பதால் இதனைத் தென்னாடுடைய சைவம் என்றும் இறைவனைத் தென்னாடுடைய சிவன என்றும் போற்றி வழிபடுகின்றனர். இத் தென்னாடுடைய சிவனே பிற நாடுகளி லெல்லாம் இறைவன என்று போற்றப் பெறுகிறான். நாட்டிற்கு நாடு, சமயத்திற்குச் சமயம் அவனது திருப்பெயர் வேறுபட்டிருப் பினும், மூலமுழுமுதல் இறைவன் சிவனே என்று சைவப் பெருமக்கள் பெரிதும் நம்புகின்றனா. தம் இறைவனமீது கொண்ட அளவு கடநத காதலால இவ்வாறு நம்புகின்றனர் என்று கொண்டாலும் இதில் ஒரு பேருண்மை பொதிந்துள்ளதென்பதை அண்மைக் கால ஆய்வாளர்கள கண்டு பிடித்துள்ளனர்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற இலக்கியக் கூட்ட மொன்றில பேசிய கிறித்தவசமய அன்பர் திரு. மு. தெய்வநாயகம் அவர்கள், உலக சமயங்கள் அனைத்துமே தமிழகத்திலிருந்து சென்ற வர்கள் உருவாக்கியவையே என்றும், அனைத்து சமயங்களுக்கும அடிப்படையாக இருந்தது தமிழகத்தில் பழங்காலத்தில நிலவிவந்த சமயமே என்றும் குறிப்பிட்டார். அச்சமயத்தின் பெயர் இன்ன தெனத் தெரியாத நிலையில அதனைத் 'திராவிட சமயம்' என்று குறிப்பிடலாம் என்றும் அவர் கூறினர்.

திரு. மவ்லானா என்ற இஸ்லாமிய அன்பர் தாம் எழுதியுள்ள 'சேது முதல சிந்து வரை' என்ற நூலில் சேது என வழங்கும் இராமேசுவரம் பகுதியிலிருந்தே உலக சமயங்களைத் தோற்று வித்தவர் பிரிந்து சென்றனர் என்று தமது மிக விரிவான ஆய்வு

நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்விருவருமே, கிறித்தவ சமயம் தோன்றக் காரணாயிருந்த ஆபிரகாம் என்ற சமய அறிஞரும் இஸ்லாமிய சமயம் தோன்றக் காரணாயிருந்த இபரகீம் என்ற சமய அறிஞரும் ஒருவரே ஆவர் என்றும், அவர் தென்னிந்தியா விலிருந்தே சென்றிருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றனர்.

உலக சமயங்கள் தென்னகத்திலிருந்து சென்றவை என்பதற்கு அவர்கள் எடுத்துக் காட்டும் அடிப்படைச் சான்று உலக முழுவதும் பழங்குடி மக்கள் இலிங்க வழிபாட்டையே மேற் கொண்டிருந்தன ரென்பதேயாம். இன்றும் பல நாடுகளில் புதைபொருளாய்வாளர், ஆவுடையாரும இலிங்கமும் இணைந்தும் தனித்தனியாகவும் உள்ள நிலையில் பல இடங்களில் அகழ்வாய்வில் கண்டுபிடித்துள்ளனர்.

உலகில் தொடக்கத்தில் ஒரு தெய்வ வழிபாடே இருந்தது. பின் னரே பல தெய்வ வழிபாடு பெருகிற்று. அந் நிலையில பல தெய்வ வழிபாட்டைக் கண்டித்து ஒரு தெய்வ வழிபாட்டை நிலைநிறுத்த விரும்பியவர் நபிகள் நாயகம். இன்று இஸ்லாமியப் பெருமக்கள் புனிதப் பயணம் செல்லும் மக்காவிலுள்ள 'க:பா' என்ற திருத் தலத்தில் திரைகளுக்கு நடுவே இலிங்கமே பெரிய அளவில் இருப் பதாகத் திரு. பத்மநாபன் குறிப்பிடுகின்றார். ஆதாரம்: சயர் உல் ஒகுல் - அரபு இலக்கியம்.

இவர்தம் ஆய்வுகளனைத்தும் எந்த அளவு உண்மையென்பதும் உலகோரால் ஏற்றுக் கொள்ளத்தக்கவை என்பதும் காத்திருந்து காண வேண்டியவை. இருப்பினும் உலகத்தில் முதல் மனிதன் தோன்றிய இடம் தென்னகமே என்பதற்கு இந்த ஆய்வுகளும் உதவு கின்றன.

குமரிக் கண்டம் என்ற ஒன்று இருந்ததா என்பதே இன்னும் உறுதி செய்யப் பெறவில்லை. தமிழறிஞர்கள் பலரே இதை ஒத்துக் கொள்ளவில்லை. இவையெல்லாம் இலக்கியப் புரட்டு. தற்பெருமை கூறும் தமிழனின் நம்ப முடியாத கூற்று என்று கூறி வந்தனர்—வருகின்றனர். உருசிய நாட்டு அகழ்வாய்வாளர்கள் கப்பலில் சென்று ஆழ்கடலாய்வு செய்ததன் மூலம் குமரி முனைக்குத் தெற்கே அழிந்து போன நகரங்கள் கடலுக்கடியில் இருக்கலாம என்று கூறிய பின் நம் தமிழறிஞர்கள்—யாரையோ மனநிறைவு செய்யக் கருதித் தமிழர்களும் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்குவந்து குடியேறிய வர்களே என்று கூறி வந்தவர்கள்—இன்று சற்றுக் கலங்குகிறார்கள். எனினும் 'கடலுக்கடியிலாவது, நகரங்கள் இருப்பதாவது?' என்று தம்மைத் தாமே தேற்றிக்கொள்கின்றனர்.

முதல் மனிதனைப்பற்றித் திரு. மல்லாறு அவர்கள் குறிப்பிடுகை யில் "சேதுவில் தோன்றி சேதுவிலும் குமரியிலுமாக வளர்ந்தான்.

அங்கிருந்து எங்கும் விரவி வியாபித்தான். சிந்துவில் தங்கி நைல் ஆறு வரையிலும் அதற்கு அப்பாலும் எப்பாலும் உலகம் முழுவதிலும் நடந்தவன் அவனே. குமரி நிலப்பரப்பின் வழியாக ஆஸ்திரேலியா வரையும், அதற்கப்பாலும், ஆப்பிரிக்காவுக்கும், ஏன்? —துருவம் வரையும் கூட நடந்தவன் அவனே'' (சேது முதல் சிந்துவரை...பக். 70) என்ற முடிவுக்கு வருகிறார்.

முதல் மனிதன் தமிழனே என்று கூறிய திரு. மவ்லானு அவர்கள் தமிழே மூத்த மொழி என்றும் அறுதியிட்டுக் கூறுகிறார். 'தமிழ் மொழி பிறமொழிகள் போலச் சில பல நூறாண்டுகளுக்கும் மேலாக அடிப்படையில் மாறுபாடின்றி வளர்ந்துவருகிறது என்று குறிப்பிடுகின்றார். 'தமிழனே முதல் மனிதன், அவன் மொழியே மூத்த மொழி, அவன் சமயமே பழம்பெரும் சமயம' என்று மேற்கூறிய அறிஞர்களின கூற்றுகளால் உணர முடிகிறது. இருப்பினும் இதனை முழு உண்மை என்று இன்று கிடைத்துள்ள சான்றுகளைக் கொண்டு நிறுவ இயலாது. இது முற்றிலும் தவறானது என்று கூறப் பலர் முன்வரலாம். ஆய்வுகள் பல இன்னும் நிகழ்த்தப்பெற வேண்டியுள்ளன. எதிர் கால ஆய்வுகள்தாம் உண்மையை நிலைநாட்ட வேண்டும்.

மறைத்திரு மறைமலையடிகளார் அறக்கட்டளை

அன்புடையீர்,

வணக்கம். சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பேரறிஞர் பன்னிருவர் பெயரில் அறக்கட்டளைகள் நிறுவுவதென்று அறிஞர்களால் முடிவு செய்யப்பெற்றபடி தனித்தமிழ்த்தந்தை மறைத்திரு மறைமலையடிகள் பெயரில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளையின் சார்பில் தனித்தமிழியக்கம். மொழியியல், சைவசமயம் ஆகிய துறைகளில் ஆண்டுதோறும் ஏதாவது ஒரு பொருள்பற்றி, தக்க அறிஞர் ஒருவரைக் கொண்டு மூன்று நாள் ஆய்வுச் சொற்பொழிவு நிகழ்த்திப் பரிசு வழங்குவதென முடிவு செய்துள்ளோம். அதற்குரிய வைப்புத் தொகையாக ரூ. 10,000 மாண்புமிகு. கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களிடம் விரைவில் வழங்கப்பெறுதல் வேண்டும். அதற்கென முறையே ரூ. 100/-, ரூ. 50/-, ரூ. 25/- என நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

எனவே, இந்த அறக்கட்டளைக்குத் தங்கள் பங்காக இவற்றுள் ஏதேனுமொரு தொகையினை அளித்து ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

தென்னிந்திய தமிழ்ச் சங்கம்
79, பிராட்வே, சென்னை-108.

இரா. முத்துக்குமாரசாமி
செயலாளர்

மகனும் மானும் ஆனும்

[கழக இலக்கியச் செம்மல்,
புலவர் இரா. இளங்குமரன்]

மகன் என்பது ஆண்பால் இளமைப் பெயர். இப்பெயர் பெரு, குறு, மா முதலிய முன்னடைகளைக் கொண்டு பெருமகன், குறுமகன், மாமகன் எனப் பண்டு தொட்டே வழங்கலாயிற்று.

பெருமகன்: "அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்" —சிறுபாண். 86

"மழவர் பெருமகன் மாவள் ஓரி" —நற். 52

குறுமகன்: "குறுமகன் தன்னால்" —சிலப். 15-95

"குறுமகன் கோள் இழைப்ப" —சிலப். 29.6 : 1

மாமகன்: "மாமகன், கவவுக்கொள் இன்குரல்" —நற். 212

பின்னாளில் இவற்றுடன் அரு, திரு, மரு, சிறு, பூ, சீர் முதலியனவும் முன்னடைகளாக மகனை ஒட்டிப் பெருவழக்காயின. இவற்றுள் 'பெருமகன்' என்னும் சொல்லின் திரிபை நோக்குவோம்.

பெருமகன் என்பதிலுள்ள 'மகன்' என்னும் பெயர், கழகப் புலவர்கள் காலத்திலேயே 'மான்' என்றாகிப் 'பெருமான்' என நின்றது. குறித்த சில சொற்களில் குறித்த சில குறில் இணைகள் மாறி, ஒரு நெடிலாக—முதற்கண் நின்ற குறில் அதன் இன நெடிலாக—மாறுதல் தமிழியல்.

(எ-டு) அகல் - ஆல்; பொழுது - போது; தொகுப்பு - தோப்பு.

இம்முறையே முறையாய் மகன் 'மான்' என ஆயதாம். ஆயின் ஒரு வேற்றுமை, 'அகல் - ஆல்' முதலியவை போலத் தனிச்சொல் நிலையில் மாறாமல் 'பெரு' என்னும் முன்னொட்டுடன் கூடிய மகன் என்னும் பெயரே 'மான்' என்றாகியது.

பெருமான்: "ஒன்றுப் பூட்கைச் சென்னியர் பெருமான்" —நற். 85

"பெருமான் நகைமுகங் காட்டு" —கலித். 82

"அரைசர் பெருமான் அடுபோர்ச் செழியன்" —சிலப் 22 : 8

பெருமான் என்பதனுடன் 'ஆர்' என்னும் சிறப்பு ஈறு இணைந்து "பெருமானார்" என வழங்குதலும் நேர்ந்தது. (முத்தொள். 62). 'பெரும' என அண்மை விளியாதல் பண்டே நிகழ்ந்தது.

"பெருமநின் வண்புகழ் நயந்து" —முருகு. 285

"வந்தேன்பெரும வாழிய நெடிது" —பெரும்பாண். 460

"வானவரம்பனை நீயோ பெரும" —புறம். 2

பெருமானே எனச் சேய்மை விளியாதல் பெருவரவு பிற்காலத்தது.

"பித்தா பிறைசூடி பெருமானே" —சுந். தேவா.

"பெறுதற் கரியன் பெருமானே" —திருவா. யாத். 7

பெருமான், 'பெருமன்' என்று ஆதல் கம்பர் காட்டியதாம் எனக் கம்பராமாயண அகராதி கூறும். ஆயின் 'பெரும' என்பதே பாடம். 'பெருமான்' என்னும் சுவடி வேறுபாடே ஆங்குண்டு. (உயுத். 3301)

இனிப் பெருமான், 'பெம்மான்' என்று திரிந்தது. "பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே" என்னும் ஆளுடைய பிள்ளையார் மொழியை எவரே அறியார்? 'பெம்மான் என்று எப்போதும் ஏத்தும் நெஞ்சிற் செறிந்தானை' என்பது நாவுக்கரசர் வாக்கு (44 : 9). "பெம்மான் பெருநந்தி" என்பது திருமூலர் திருமொழி (2635). பெம்மான் என்பதுடன் தம்மான், எம்மான், அம்மான் என்பவற்றையும் எண்ணுக.

பெருமான் 'பெம்மான்' அளவில் நின்றதோ? பிரான் எனவும் திரிந்து ஆட்சிபெற்றது. சிவபிரான் (சிவபெருமான் கண்ணபிரான் கண்ணபெருமான்) எனவும் எம்பிரான் தம்பிரான் எனவும் பிறவாறும் வழக்கில் ஊன்றின. இலக்கிய ஆட்சியிலும்,

"பெரியாய் போற்றி பிரானே போற்றி"
—திருவா. போற்றி. 177

"எம்பிரான் அடியார்" —பெரிய. மெய்ப். 17

எனப் பெருவழக்காயிற்று. திருமூலர்,

"பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு
பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே"

என்று 'பிரானை' ஒரு பாடலில் நான்குமுறை பெய்தார். 'பெரு' 'பிரு'வாகி 'மான்' 'ஆன்' ஆகிப் 'பிரான்' ஆயினதைக் கண்டு கொள்க. அன், ஆன் என்பவை ஆண்பால் ஈறுகள் அல்லவோ?

பெருமகன் போல, அருமகன் என்பது அருமானாகி நின்று 'அருமன்' என ஆயிற்றுப்போலும் என்று எண்ணுதற்குக் கழகக்

கால வள்ளல் பெருமகனுர் பெயர் நினைவூட்டுகின்றது. மாமகன் என்பதே 'மாமன்' ஆயிற்றுப்போலும் என்பதையும் எண்ணலாம்.

குட்டி குறுமான் என வழங்கும் வழக்கு, குட்டி என்பது சிறு பெண்பிள்ளையையும், குறுமான் என்பது சிறு ஆண்மகனையும் குறித்தலைக் கருதுவார் கண்டுகொள்ளலாம்.

பெருமகள் என்னும் பெண்பாற் பெயர் 'பெருமாள்' என்ருகுமோ என்று ஐயுறுவார் உளராயின், 'பெண்பெருமாள்' என்னும் இலக்கிய ஆட்சியையும், 'தமிழறியும் பெருமாள்' என்னும் பெண் மணியார் கதையையும் எண்ணுக.

பெருமான், 'பிரான்' ஆனல் 'பெருமாள்' பெருமாட்டி, பிராட்டி ஆகமாட்டாளா? அவனுக்கு, அவள் இளைத்தவளா என்ன? பெருமாட்டியும் பிராட்டியும் இப்பொழுது இருவகை வழக்குகளிலும் காணக்கிடப்பதுடன் அகராதி ஆட்சியிலும் வலுவாக ஊன்றி யுள்ளதே!

முறைமுறையே வெள்ளத்தால் உருட்டப்பட்டுவரும் கல் தேய்ந்தாலும், கல்லின் தன்மையைக் காட்டிக்கொண்டு இருப்பது போலச் சொல்லும் கால வெள்ளத்தில் எத்தனை எத்தனை வகை யாகத் தேய்ந்தாலும் தன் பண்டை நிலையைக் கண்டுகொள்ள உதவுதல் ஒருதலையாம்! இத்தகு சொல்லாய்வு சொல் வரலாற் றுக்கு ஏந்தாக இருப்பதுடன், கால ஆய்வுக்கும் துணை நிற்றல் தெளிவாகப் புலப்படும். பெம்மான், பிரான், பிராட்டி என்பன ஆளப்பெறும் நூல் ஒன்றைக், கழக நூல் என்று சொல் வரலாறு அறிந்தோர் கொள்வரோ? ஆகலின், சொல் வரலாற்றில் கால வரலாறும் கதுவிக் கிடத்தல் விளக்கமாம்!

இனி என்ன?

[நல்லார்க்கினியன்]

இலங்கைத் தமிழருக்கு இரங்கற்பா பாடிவிட்டோம்
எழுச்சிமிகு பேரணிகள் எங்கும் நடத்திவிட்டோம்
ஏடுகளில் நாடுகளில் எழுத்துப்போர் தொடுத்திட்டோம்
ஏழைத் தமிழினத்தை எருவாக்கி வாழ்ந்திடவே
இந்நாட்டு அரசியலார் எண்ணுகின்ருர் போலுமென்பேன்
ஏனென்று கேட்போரை ஏளனங்கள் செய்கின்ருர்
எனினும் தமிழ்நெஞ்சங்கள் இனியென்ன செய்வதென்று
எரிமலையின் அமைதியென இருக்கின்ருர் எங்கணுமே!

காலனைக் காய்தல்

[க. சி. கமலையா]

ஆவதனைத்தும் அழியும் :

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்"

என்று திருநாவுக்கரசர் முழங்கினார். சாவுக்கஞ்சாது நின்று தம் பணியைக் கைவிடாத பெரியார் அவர். சாவின் மடியில் துயிலாதார் எவரேனும் இருந்தனரோ? அன்றிச் சாவைத் தவிர்ப்பவர் எவரும் உளரோ? 'பிறந்தவர் இறப்பதுறுதி' என்ற நடைமுறை நிகழ்ச்சியைக் கண்டும் காணாமல் மக்கள் கண்ணை மூடிக்கொண்டிருந்தாலும் சாவோலை வந்தே தீரும். காலன் கண்டிப்பானவன். கடமையைக் காலந்தாழ்த்தாது நிறைவேற்றுபவன். ஷேக்ஸ்பியர் படைத்த ஹாம்லெட் என்ற பாத்திரம், 'சாவு' என்ற இந்தக் காவற்காரப் பயல் ஆளைக் கைப்பற்றுவதில் கண்டிப்பானவன்'* என்று சொல்கிறான். கூற்றுவனைப் பகைவனாகவும் நண்பனாகவும், தாயாகவும் தந்தையாகவும், போற்றினாலும் தூற்றினாலும் அவன் பிடியிலிருந்து எவரும் தப்ப முடியாது. ஆவதனைததும் அழியும் என்பதன் உண்மையை உணர்த்தத் திருவள்ளுவர்,

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு" (336)

என்றுரைத்தார். 'உறங்குவது போலும் சாக்காடு' என்று எத்துணை எளிய சொற்களில் திருவள்ளுவர் சாவைப் பற்றிச் சொல்கிறார். மீளாத் துயில் சாக்காடு. சாவைப்பற்றிச் சிந்திக்காதவனும் அதைச் சந்திக்காமலிருக்க முடியாது. சாவு மனிதனை நிழல் போலத் தொடர்கிறது. எவ்வுருவில் தொடர்கிறது என்று சொல்லமுடியாது. நோயாக வரும்; பேயாகவும் வரும். ஆணாய் வரும், பெண்ணாய் வரும், அலியாயும் வரும். அமுத உணவில் வரும், அரவு நஞ்சில் வரும். பொருள் ஈட்டலில் வரும், அதன் இழப்பிலும் வரும். பல்லுருவம் கொண்டு வரும் கூற்றுவன் பேற்றினை என்னென்றுரைப்பது! உலகக் குடிமகனாய் விளங்கிய "டாக்ஹாம்மர் ஷோல்டு" கூற்றுவன்பற்றி உரைத்த பொன்மொழிகளை நினைவு கூர்வது பொருந்தும்.

† சாவைத் தேடி அலையாதே. அது உன்னைக் கண்டு பிடித்துவிடும். சாவை நிறைவாக்கும் பாதையைததேடு.

* * *

---

*'This fell sergeant, death, is strict in his arrest.'

†Dag Hammarskjold : *Vagmarken.*

பழங்காலத்தில் கூற்றுவனும் என்னைப்போல் ஒருவன். இப்பொழுதோ பந்தியில் எனக்கு அடுத்த இலையில் அவன் உட்கார்ந்திருக்கிறான். அவனுடன் நட்புப் பாராட்ட வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டுவிட்டது.

உடம்போடு உயிரிடை நட்பு :

உலகின் உயிர்களனைத்தையும் பறித்துக்கொண்டு செல்லும் சாவைக் கண்டவருண்டா? உயிரைத்தான் இதுவென்று உடம்பினின்றும் பிரித்து அடையாளம் கண்டுகொள்ள முடியுமா? உடம்புக்கும் உயிருக்குமிடையே நிலவும் உறவு முறிந்ததும் அந்நிலையைச் சாவு என்கின்றோம்.

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு." (338)

முட்டையிலிருந்து வெளிவந்த புள் பறந்து சென்றுவிடுவது போன்றதே உடம்புக்கும் உயிருக்குமிடையே நிலவிய நட்பு. "'நட்பு' என்பது ஈண்டுக் குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போதலை உணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய உருவாய அநித்தமாய உடம்பும் தம்முள் மாறுகலின், வினைவயத்தால் கூடியதல்லது நட்பில என்பது அறிக" என்று பரிமேலழகர் விளக்கமளிக்கிறார். ஏதென்றறியாக் குழப்பம் மனிதனைப் பற்றிக்கொண்டுள்ளது. சாவு தானாகவே இயங்கும்; ஒருவன் தானாகவே சாவை நாடிச் செல்வதும் உண்டு. "சாவின் அடி காதலன் கிள்ளுவதைப் போன்றது; உறைக்கிறது; எனினும் விரும்பத்தக்கது"* என்று கிளியோபாட்ரா உரைப்பதாக ஷேக்ஸ்பியர் சொல்கிறார்.

"பட்டிக்கடாவில்வரும் அந்தகா!
கட்டிப் புறப்படடா,"

என்றாலும் சாவை மறத்தல் இயலுமா? என்றாவது ஒருநாள் அதனுடன் போராடித் தோற்றுப்போவது திண்ணம். சான்றோனும் கயவனும் அரசனும் ஆண்டியும் எல்லோருமே சாவுக்கு ஒருதரத்தர். வேறுபாடின்றிக் கடமையை நிறைவேற்றுகிறது சாவு என்னும் மர்மக்கருவி. அருணகிரிநாதர் கந்தாலங்காரத்தின் பல பாடல்களில் சாவைப்பற்றிய கருத்தினைக் கூறுவதில் ஈடுபட்டுள்ளார்.

---

*"The stroke of death is as a lover's pinch,
Which hurts and is desired."—Shakespeare's
Antony and Cleopatra.

"ஞானகர சுரபாஸ்கரனே!
மரணப் பிரமாதம் நமக்கில்லையாம், என்றும்வாய்த்த துணை
கிரணக் கலாபியும் வேலுமுண்டே"

என்று அருணகிரிநாதர் முருகன் அருளை நாடுகிறார்.

"கொடுஞ் சூரன் நடுங்க வெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில் ஏறும் இராவுத்தனே!"

என்று முருகனை விளித்து,

"படிக்கும் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய்"

என்று முருகனிடம் அடைக்கலம் வேண்டுகிறார்.

"எட்டாத வெளி
மட்டும் புதைய விரிக்கும் கலாப மயூரத்தனே"

என்று வேலனைக் கூவி,

"வெட்டும் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன் விடுங்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டும்"

என்றும் விரும்புகிறார் முருகனடியார்.

"பரமகல்யாணிதன் பாலகனே,
மாகத்தை முட்டி வரும்நெடுங்கூற்றன் வந்தால் என்முன்னே
தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்"

என்றும் முருகனிடம் தமக்குள்ள அசையா நம்பிக்கையை உணர்த்த அருணகிரியார் மறக்கவில்லை.

"கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் ததிரப் படுவாய்
தார்மார்ப, தலாரி, வலாரியெனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே"

என்று கந்தரனுபூதிப் பாடலிலும் அவர் தெரிவிக்கின்றார்.

ஓலைகொண்டு வரும கூற்றுவன் தூதர் வரும்பொழுதும் கூற்றுவனே நேரில் வந்தபொழுதும் முருகன் கைவேலுண்டு, மயிலுண்டு; எனவே அஞ்சுவதறகில்லை. என்றெல்லாம் அருணகிரி நாதரின் தனிமொழிகள் உள்ளன.

கூற்றுவனை அறைகூவிப் போருக்கழைக்கும் அருணகிரி நாதரின் பாடல்கள் முருகன்பால் அவர் கொண்ட பக்திப் பெருக்கையும் அதன் விளைவால் ஏற்பட்ட உறுதிப்பாட்டையும் காட்டும்.

''தண்டாயுதமும் திரிசூலமும் விழத்தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா அந்தகா, வந்துபார் சற்றென்கைக் கெட்டவே''.

கூற்றுவனை 'அடா' என்று எள்ளியும் 'அந்தகா' என்று விளித்தும் கூறியுள்ளார். அவனைக் கைகலப்பில் புறங்கண்டாலொழிய மனநிறைவேற்படாதென்று மற்றுமொரு பாடலில் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

''பட்டிக் கடாவில் வரும் அந்தகா, உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண்டலாது விடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ்வேற் பெருமான் திருமுன்புநின்றேன்
கட்டிப் புறப்படடா சத்திவாள் என்றன் கையதுவே''

மையக் கருத்து :

சாவைக் 'கூற்று' என்று அஃறிணைப் பொருளாகவும் 'கூற்றுவன்' என்று ஆண்பால் உயர்திணையாயும் புலவர் உரைப்பர். கூற்றுவன் எருமைக்கடாவின்மேல் அமர்ந்து பாசக் கயிற்றுடன் வருவான். பணியாள் மூலம் ஓலை அனுப்புவதும் உண்டு. புராணக் கதைகளைத் தழுவியே அருணகிரிநாதரின் கருத்துகளும் அமைந்தன. சாவைச சாடுவதைத் தம் பாடல்கள் வழித் தெரிவித்த அருணகிரிநாதர் சாவைத் தவிர்ப்பதென்பது இயலாது என்பதை அறியாதவரல்லர். சாநுதுணையும் சாவின் கிலியினின்றும் மனிதன் தன்னை விடுவித்துக்கொணடு மனிதனாய் வாழ வேண்டுமென்பதே அருணகிரிநாதர் பாடல்களின் மையக் கருத்து எனக் கொள்ளலாம்.

''தடுங்கோள் மனத்தை விடுங்கோள்
வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள்''

என்பது அருணகிரிநாதர் அறிவுரையாகும்.

திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்களின் படத்திறப்பு

அண்மையில் காலமான கழக நூலாசிரியர் திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கட்கு நீத்தார் வழிபாடும், அவரது திருவுருவப் படத்திறப்பும் 17-10-88இல் புலவரவர்களின் கருப்பக்கிளர் இல்லத்தில் நடைபெற்றன. புலவரவர்கள் படத்தைக் கழக ஆட்சியாளர் உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிட். அவர்கள் திறந்துவைத்துப் புலவர் அவர்களின் சிறப்புகளைப்பற்றி உரையாற்றினர். புலவர்கள் ச. தமிழ் வேலன், எம். ஏ., ச. சண்முகம், எம்.ஏ., நிலக்கிழார் திரு. பஞ்சாட் சரத்தேவர் ஆகியோர் இரங்கல் உரை ஆற்றினர். திரு. வி. கோவிந்த ராசன் நன்றி நவின்றார்.

மைவண்ணப் பெருமாளுக்கோர் மாடக்கோயில்*

[டாக்டர் இரா. கலைக்கோவன், எம்.பி.பி.எசு., டி.ஓ.]

திருச்சி மாநகரத்தின் ஒரு பகுதியான திருவரங்கத்தின் புகை வண்டி நிலையத்திற்கு வடக்கில் உள்ள, ஆரவாரமற்ற ஒதுக்குப்புற மானதொரு பகுதியில் அமைந்துள்ளது காட்டழகிய சிங்கர் கோயில். பெருமாளுக்காகக் கட்டப்பட்ட கோயில்களுள் ஒன்றான இது திருவரங்கம் கோயிலுடன் தொடர்புடைய—அதன் ஆளுகைக்கு உட்பட்ட கோயிலாகும்.

சுற்றிலும் மதில்களோடு கூடிய இக் கோயிலின் நுழைவாயில் மேற்குப்புறத்தில் அமைந்துள்ளது. இங்குக் கோபுரம் இருந்த தற்கான அடித்தள அமைப்பு காணப்படுகிறது. இதன் முன்புறம் ஒரு மண்டபமும் இடப்புறம் ஒரு மண்டபமும் அமைந்துள்ளன. வலப்புறம் பாசியடைந்து பாழ்பட்ட நிலையில் திருக்குளம் அமைந்துள்ளது.

கோபுரவாயிலுள் நுழைந்ததும் இருபுறமும் உள்ள திண்ணை களின் மேலுள்ள சுவர்களில் சிற்பங்கள் உள்ளன. வலப்புறம் திருமாலின் கிடந்தநிலை காட்டப்பெற்றுள்ளது. இவ்வடிவம் 'அனந்த பத்மநாபசாமி' என்று குறிக்கப்படுகிறது. இடப்புறம் பாம்பின் மீதமர்ந்த கோலத்தில் நிலமகள், திருமகள், நீளாதேவி என்னும் தேவியருடன் திருமால் காட்சியளிக்கிறார்.

உள்ளே அமைந்துள்ள மண்டபத்தைப் பக்கத்திற்கு ஆறாய்ப் பன்னிரண்டு தூண்கள் தாங்குகின்றன. இத் தூண்களின் அடியில் பிற்காலச் சிற்பவேலைப்பாடுகள் காணப்படுகின்றன. இடப்புறம் அமைந்துள்ள ஆறாவது தூணின் கிழக்குப் புறத்தில் பிள்ளையார் வடிவம் காணப்படுகிறது. சைவம், வைணவம் இரண்டிலும் ஏற்றுக்கொள்ளப்படும் தெய்வம் பிள்ளையார்தான். பிள்ளையாரைத் திருமாலின் அம்சமாகக் கருதுகிறார்கள். இங்குப் பிள்ளையார் சிறப்பாக வழிபடப்படுகிறார்.

இடப்புறம் இரண்டு திருமுன்கள் உள்ளன. ஒன்று வெறுமையாக உள்ளது. இன்னொன்றில் சக்கரத்தாழ்வார்

---

*மாடக்கோயில் வடிவில் அமைந்திருக்கும் இக் கோயிலை அறிமுகப்படுத்தியவர் கரந்தைப் புலவர் கல்லூரி முதுகலை மாணவர் திரு. இளங்கோவன்.


திருவடிவம் காணப்படுகின்றது. இம்மண்டபத்தின் கூரையில் நாயக்கர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. இவை சற்று அழிந்த நிலையில் உள்ளன. இக் காட்சி துன்பமானது. இவற்றைப் பாதுகாக்கத் தக்க முயற்சிகள் எடுப்பது இன்றியமையாதது. இலக்குமிநரசிம்மரை மன்னன் ஒருவன் வழிபடு செய்வதுபோல் இவ் வோவியம் அமைந்துள்ளது. இடப்புறம் படையலுடன் ஒருவரும், குழந்தை ஒன்றும், முனிவர் ஒருவரது தோற்றமும் காட்டப்பட்டுள்ளன. வலப்புறம் வழிபடும் மன்னன், வழிபாடு செய்யும் பட்டர் (அருச்சகர்), மற்றும் தும்புரு வடிவம் காட்டப் பெற்றுள்ளன.

கோபுர நுழைவாயிலின் கூரையின் அடித்தளத்தில் கிழக்கு முகப்பில் திருமாலின் 'கிடந்த கோலம்' காட்டப்பெற்றுள்ளது. மையக்கோயிலின் முனமண்டபம் சற்றுப் பிதுங்கினாற்போல், இம்மண்டபத்திற்குள் நீட்டி அமைக்கப்பட்டுள்ளது. இதன் முகப்பில், சிம்கமுகப் புரையொன்றில், இலக்குமிநரசிம்மர் காட்சியளிக்கிறார். பிற்கால ஓவியங்கள் தீட்டப்பெற்றுத் திகழும் இம முகப்பில் சிறு சாளரத்துவாரங்கள் உள்ளன. இது கருடன் திருமுன்னின் பின்புற நீட்டலாகும்.


மையக்கோயிலைச் சுற்றியுள்ள திருச்சுற்று தூய்மையாக உள்ளது. இத்திருச்சுற்றில் மதிலையொட்டி வடபுறத் திருச்சுற்றில் நந்தவனம் உள்ளது. இந் திருச்சுற்றுத் தளத்தில பாவப்பட்டிருக்கும் கற்கள் பலவற்றில் கல்வெட்டுச் செய்திகள் துணுக்குகளாகக் காணப்படுகின்றன. இக் கற்கள் திருவரங்கத்துக்கருகில் இருந்த, இடிந்த மண்டபமொன்றிலிருந்து கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக் கல்வெட்டுத் துணுக்குகளிலிருந்து எந்த ஒரு செய்தியையும் முழுமையாக அறிய இயலவில்லை. மாடக்கோயில்போல அமைந்துள்ள மையக்கோயிலின் வடக்கு, தெற்கு இருபுறங்களிலும் படிக்கட்டுகளுடன் கூடிய நுழைவாயில்கள் அமைந்துள்ளன. இந்தப் படிக்கட்டு வாயிலின பக்கச் சுவர் யானையைப்போல் அமைக்கப்பட்டுள்ளது. அது சிற்பிகளின் சிற்பத்திறனைக் காட்டுகிறது.

இப் படிக்கட்டுகள் வழியே நுழைந்ததும் முன்மண்டபத்திற்குள் இறைவனைப் பார்த்த நிலையில் கருடனின் திருமுன் அமைந்துள்ளது. இம் மண்டபத்தின் சுவர்களில் அகோபிலத்தில் உள்ளதுபோல் எட்டுவித நரசிம்மர்களின் அழகிய திருக்கோலங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பெற்றுள்ளன. இந்த ஓவியங்கள் பல இடங்களில் வண்ணமிழந்து, சிதைந்து காணப்படுகின்றன. இவற்றைத் தக்க முறையில் பாதுகாக்கவேண்டும். நுழைவாயிலின் இடப்புறத்தில்

திருவரங்கம் காட்டழகிய சிங்கர் திருக்கோயில்



நுழைவாயில்



கருவறை விமானம்

சுவரில் சிதைந்த நிலையில் கல்வெட்டொன்று சுண்ணாம்புப் பூச்சின் கீழ் மறைந்திருந்தது. இதைக் கண்டுபிடித்த இக் கட்டுரையின் ஆசிரியரும், தொல்பொருள் ஆய்வுத் துறையின் திருச்சி மாவட்டப் பதிவாளர் திரு. அப்துல் மஜீதும் இச் சுண்ணாம்புப் பூச்சை அகற்றி இதுவரையிலும் படியெடுக்கப்படாத இக் கல்வெட்டினை முதன்முறையாகப் படியெடுத்தனர். இக் கல்வெட்டு கிரந்த எழுத்துகளில் உள்ளது. வடமொழி அறிஞர் ஒருவரின் துணைகொண்டு இதைப் படித்தறிந்தபோது இக் கோயிலின் வரலாற்றை ஒருவாறாக ஊகிக்கமுடிந்தது. அரசர்களில் சிறந்த சோமீசுவர மன்னன், குருவின் நலத்திற்காக நலக்கொடை தந்தது, சோமீசுவர தேவரால் நரஹரிதேவரின் திருவடிவம் சிம்மகிருஷ்ண அனந்த நாராயணன் என்பாரைக் கொண்டு இங்கு எழுந்தருளுவிக்கப்பட்டதும், இக் கல்வெட்டால் உணரக் கிடைக்கும் செய்திகளாகும். இந்த சோமீசுவர மன்னன் ஹொய்சளப் பரம்பரையைச் சேர்ந்த வீரசோமேசுவரனாக இருக்கலாம் என்று கருதுகிறேன். சமயபுரத்துக்கு அருகிலுள்ள கண்ணனூர்க் கொப்பத்தில், அருள்மிகு போசளீசுவரர் கோயிலைக் கட்டியதும் இம் மன்னனே என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. அதுவும் மாடக்கோயில் போன்ற அமைப்புடையது. அக் கோயிலும், இக் கோயிலும் கட்டடக்கலை அமைப்பில் பெரிதும் ஒன்றுபட்டிருப்பதும் மேற்கண்ட முடிவுக்கு உறுதி சேர்ப்பதாகும்.

முன்மண்டபத்திலிருந்து மகாமண்டபத்திற்குள் செல்ல நுழைவாயில் உள்ளது. மகா மண்டபத்தை வரிசைக்கு ஏழு தூண்களாகப் பதினான்கு தூண்கள் தாங்குகின்றன. இவை நாயக்கப் பேரரசர்கள் காலத்துக் கட்டடக்கலையை நினைவூட்டுகின்றன. விசயநகரப் பெருவேந்தர்களுக்கும், நாயக்கர்களுக்கும் தூண் அமைப்பில் மிகச்சிறிய வேறுபாடுகளே உண்டு. தூணின் உச்சியிலிருந்து கீழிறங்கும் மொட்டு போன்ற பாகம் குலைபோலக் கீழிறங்குவது விசயநகர மரபு இங்கு இது மொட்டாகவே நின்றுவிடுவதால் இது நாயக்கர் கலைமுறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

உள்மண்டபம் மிகச்சிறியது. இதில் பெருமாளுக்குத் தளிகைப்டைக்கும் அமுதுபாறை இருக்கிறது. கருவறையில் இறைவன் இலக்குமிநரசிம்மராய் எழுந்தருளியுள்ளார். இந்தத் திருக்கோலம் எட்டடிக்கும் குறையாத உயரம். வலப்பின்கரத்தில் சக்கரம், இடப்பின்கையில் சங்கு; வல முன்கையில் காப்பு முத்திரை காட்ட, இடப்புற முன்கையில் திருமகளின் இடையை அணைத்த வண்ணம், இறைவியைத் தன் இடத் திருத்தொடையில் அமர்த்திய

அழகுக்கோலம்; வலக்கால் கீழே தொங்க, இடக்காலை மடித்தபடி அமர்ந்துள்ளார். பாதங்களுக்கடியில் தாமரை வடிவங்கள், இறைவன் இறைவி இருவருக்கும் தனித்தனியே செதுக்கப் பட்டுள்ளன. பொதுவாக நரசிம்மக்கோலங்கள் சினக்குறியுடன் காணப்படும். ஆனால், இந்தத் திருமேனியின் முகத்தோற்றத்தில் அமைதியும் அன்பும் தவழ்கின்றன. இறைவனின் அருள்தங்கிய விழிச்சுடர்களில் காண்போர் மனம் மயங்கிப்போகும்.

இக்கோயிலில் மூலவரான இப் பெருமானைத்தவிர வேறு உற்சவத் திருமேனிகள் இல்லாமையால் உற்சவம் புறப்பாடு முதலியன இங்குக் கிடையா. திருமஞ்சனங்கள் மூலவருக்கே நடைபெறுகின்றன. மூலவரின் அடியில் சிறிய வடிவில் இதே இலக்குமிநரசிம்மரின் கருங்கல் திருமேனி உள்ளது.

இக்கோயிலின் கட்டட அமைப்புமுறை மிக அழகாக உள்ளது. ஏறத்தாழப் பதின்மூன்றும் நூற்றாண்டைச் சேர்ந்த அமைப்பு முறையாகக் கொள்ளலாம். இது இரண்டுதள அமைப் புடையது. முதல்தளத்தில் கோயில் கட்டட உறுப்புகள் அனைத்தும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. துணைத்தளம், தாங்குதளம், யாளிவரிமானம், கால், போதிகை, கூரை, கொடுங்கை போன்ற அகணிப் பகுதிகளும் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளன.

மகாமண்டபம், உள்மண்டபம், கருவறை இவற்றின் புறச் சுவர்களில் கோட்டப் பஞ்சரங்கள், கும்பப் பஞ்சரங்கள், சாலைகள் போன்றவை அழகுபட அமைக்கப்பட்டுள்ளன. கோட்டப் பஞ்சரங்களின் மேல் மகர தோரணங்கள் அழகுபட வடிக்கப் பட்டுள்ளன. பஞ்சரங்களின் தூண்களும், சாமரை வடிப்புகளும் மிகத் தெளிவாக அமைந்துள்ளன. சாலைகளின் அமைப்பு மாமல்லபுரத்து ஒற்றைக் கற்கோயில்களை நினைவூட்டுகின்றன. தெய்வப்புரைகள் அனைத்தும் வெறுமையாக உள்ளன.

விமானம் மூன்றுநிலை அமைப்புடையது. ஒவ்வொரு நிலையிலும் நடுவில் சாலை, இருபுற ஓரங்களிலும் கணகூடுகள், சாலைக்கும் கணகூட்டுக்கும் நடுவில் சாலைப்புரை என்ற அமைப்பு முறை சர்ணப்படுகிறது. எல்லாவற்றிலும் தெய்வத்திருமேனிகள் காணப்படுகின்றன. சிகரம் நாற்கர வடிவில் அமைந்துள்ளது. மிக அழகுபட செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களுடனும், கட்டடக்கலை நுணுக்கங்களுடனும் உயர்ந்து நிற்கும் இவ் விமானம் பிற்காலச் சோழர் கலைமுறையை ஒத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். விமானத்தின் அடித்தளத்தில் காணப்படும் சில சுதை சிற்பங்கள் நாயக்கர் காலத்து உடை, அணிகலன்கள், உடலமைப்பு முதலிய வற்றை விளக்கவல்லவையாய்ச் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன.

பதின்மூன்ரும் நூற்ருண்டில் தமிழ்ப் பேரரசர்களின் வேண்டு கோளுக்கிணங்கிச் சோழர், பாண்டியரை வென்று தென் தமிழகத்தில் நுழைந்து, அப்பகுதியில் ஒரு தலைநகரை நிறுவி, தமிழகத்துக் கலைப்புணர்வு களைப் போற்றி அவர்கள் கலைமுறையிலேயே கோயில்களை எழுப்பி, செம்மாந்து வாழ்ந்த ஹொய்சள மன்னர்களின் வரலாற்றுக்கோர் அழிக்கமுடியாத சான்ருய் விளங்கும் சிறந்த கலைப்படைப்பான காட்டழகிய சிங்கர் கோயில், கலை ஆர்வலர்கள் அனைவரும் பார்த்து மகிழவேண்டிய தலமாகும்.

———

*ஓய்வெடுக்கச் சென்றனையோ!

[புலவர் சு. சண்முகம், பி. லிட்., பி. எட்., கோட்டூர்.]

கரும்பும் செந்நெல்லும் காட்சிதரும் அழகு
கருப்பக்கிளர் ஈன்ற கன்னித் தமிழ் அறிஞ!
அருந்துக என்று அரியதமிழ் நூல்பலவும்
அரியசுவைச் சாருய் ஆக்கிய நற்புலவா!
செவியிரண்டும் கேளாமல் செவிச்செல்வம் கேட்டு
செந்தமிழ்க் கடலில் முத்தெடுத்த செல்வா!
புவியினில் உன்பெருமை குன்றிலிட்ட விளக்காய்
புகழ்பெற்ற விதம் தெரியும் உண்மை. 1

சிவநாமம் சொல்லிச் சிந்தித்து எப்பொழுதும்
நன்றே செய்தளித்த நல்லவரே!
தவமுனியாய் நின்று தண்டமிழ்க்கு நீசெய்த
நன்றி மறந்திடோம் யாம் ஐயா!
இனியன் எனும் பெயரில் இன்பத் தமிழ்நூல்கள்
ஏராளம் எமக்களித்த ஈடிலாப் புலவ!
இனியும் உமைப் போல் நல்லறிஞர் பிறப்பதுவும்
இங்குண்டோ என ஏங்கிடுவோம் ஐயா! 2

உடல் பொருள் ஆவியை உயர் தமிழ்க்காக்கி
உன் வாழ்வை அர்ப்பணித்த உயர்தலைவா!
கடல்போல் எண்ணிலா நூல்படைத்துத் தமிழ்த்
தொண்டு செய்து பெருமையுற்ற அறிஞ!
சைவத் தமிழ்வளர்க்கும் கழகத்தில்சேர்ந்து
சளைக்காமல் நூலெழுதிக் களைத்துப்போய்
கைவலித்த காரணத்தால் எமைப்பிரிந்து
ஓய்வெடுக்கச் சென்றனையோ போலும். 3

•17—10—1988ல் கருப்பக்கிளரில் நடைபெற்ற சு. அ. இராம சாமிப் புலவரவர்களின் நீத்தார் வழிபாட்டின்போது பாடிய இரங்கற்பா.

பாராட்டுரை:

"துறவியின் புதையல்"—ஓர் அரிய படைப்பு!

சங்க நூற்புலமைச் செறிவும், தனித்தமிழ் அழுத்தமும், சீர் திருத்தச் சால்பும் நிரம்பிய பெரும்புலவர் பா. நாராயணன் அவர்தம் புலமைத் திறம் துறவியின் புதையலாய்த் தமிழ் உலகுக்கு வாய்த்துள்ளது.

பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணீய நாடகத் திறம், பாவேந்தர் பாண்டியன் பரிசு மையம், இளங்கோவடிகளார் இசைநலம், திருக்குறள் வளம், தந்தை பெரியார் நாட்டம் என்பவை இந்நூலின் வடகங்கள்!

மெய்த் துறவியார் மடத்தில் இருந்த ஓர் அரிய ஆவணப் புதையலைப் பொய்த் துறவி ஒருவர் பொற்புதையலெனக் கரவால் கவர முயன்று, பேய்ப் பெருஞ் சூழ்ச்சி புரிந்தாராக அதனைப் பெறற் கருஞ் சூழ்ச்சியால் வெற்றிகொண்ட சீர்மையை விளக்குவதே இந் நாடகம்.

நூலாசிரியர் மருத்துவ மேலோர் ஆகலின்,

"நோய்க்கிடம் உலகின் வாய்க்கிட மாகும்"

என்றும்,

"குடலிடைப் புண்ணெனிற் கீறியாற் றுவரால்
நினைவிடைப் புண்ணெனில் எனைவகை யாற்றுவர்"

என்றும் திறமாகப் புகல்கின்றார்.

இவர்தம் திருக்குறள் தேர்ச்சி,

"நோய்நிலை நாடியும், நோயின் முதனிலை நாடியும்,
நோயினைத் தணிக்கும் வாயினை நாடியும்,
நோக்குமா றுளப்பட நோக்கினால், அவள்நோய்க்கவளே
மருந்தென் றுரையா மகிழ்ந்தனை போலும்"

என்று ஓரிடத்தே 'நோய்நாடி', 'நோக்கினாள்', 'பிணிக்கு மருந்து' என்னும் முக்குறள் வளமும் பொதுள வைக்கின்றது.

அகவை முதிர்ந்த ஆசிரியரின் இளமைத் துடிப்புடைய கருத்து நலங் கனிந்த தனித்தமிழ் நாடக நூல் பாராட்டுதற்குரியது; பயில்வதற்குரியது; பரிந்தேற்றுப் போற்றுதற்குரியது! சிறப்பாகத் தனித் தமிழ் அன்பர்களும், பகுத்தறிவு ஆர்வலரும் ஊக்குவிக்கக் கடப்பாடுடையர்!

ஒன்றே ஒன்று: நாடக அளவினைச் சுருக்கியிருக்கலாம் போலும்!

துறவியின் புதையல்: பெரும்புலவர் பா. நாராயணன்; கபிலன் பதிப்பகம் 84, இராசாசி குடியிருப்பு, ஆத்தூர், சேலம் 636 102, பக்கம் 80+408. விலை ரூ. 20/-

—இரா. இளங்குமரன்.

———

தேவாரத்தில் 'பராய்'

[பி. எல். சாமி, இ. ஆ. ப.]

'வன்பராய் முருடொக்கும் என் சிந்தை' என்று தேவாரத்தில் ஒரு வரி கூறப்பட்டுள்ளது. 'பராய்' ஒரு மரமாகும். பராய் மரத்தை பிராய் என்று இக்காலத்தில் அழைப்பர். இம் மரத்தில் முண்டுகள், முடிச்சுகள் ஏறக்குறைய உருண்டையாகக் காணப்படும். இந்த மரத்தை விறகுக்குப் பயன்படுத்தும்போது இந்த முண்டு, முடிச்சான பகுதிகளை வெட்டிப் பிளப்பது மிகவும் கடினமாகும். உடைத்துப் பிளக்கக் கடினமான பராய் மரத்தின் முருடுபோல, அதாவது முண்டு போல் என் சிந்தை உள்ளது என்று தேவாரத்தில் கூறப்பட்டுள்ளது. சிவபெருமானிடம் சிந்தை செல்லாது முரடாய் இருப்பதுவே இங்குச் சொல்லப்பட்டுள்ளது. இன்று பேச்சு வழக்கில், 'அவன் பெரிய முரடன்,' 'முரட்டுத்தனமானவன்' என்று பயிலும் வழக்குகள் உண்டு. புதுவைப் பகுதியில் பலாக்காய் முரடன் என்ற பேச்சு வழக்கு பயிலுகிறது. பலாக்காய் போன்று முட்களையுடைய முரடன் என்ற பொருளில் வழங்குகின்றது.

பராய் என்ற பெயர் 'பருத்தது' என்ற பொருளில் வந்திருக்கலாம். 'இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து' என்று திருமுருகாற்றுப்படையில் (வரி 10) பருத்தது என்ற பொருளில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். பராவுதல் என்ற சொல் வணங்குதல், புகழ்தல் என்ற பொருளில் வந்துள்ளது. திவ்விய பிரபந்தம் நாச்சியார் திருமொழியில் (956) வணங்குதல் என்ற பொருளில் வந்துள்ளதைக் காணலாம். பரசுதல் என்ற சொல் துதித்தல் என்ற பொருளில் 'செந்நாவலர் பரசும் புகழ்த் திருப்பெருந் துறை' என்று திருவாசகத்தில் (34-1) வந்துள்ளதைக் காணலாம். இந்த மரத்தைப் பண்டைக் காலத்தில் மக்கள் தொழுது பராவி வந்ததாலும் பராய் என்ற பெயர் தோன்றியிருக்கலாம். வடநாட்டில் வாழும் திராவிடப் பழங்குடிகள் இந்த மரத்தை இன்றும் தொழுது வருகின்றனர். தொழுது பராவினதால் 'பராய்' என்ற பெயர் வந்தது என்பதே மிகவும் பொருத்தமானதாகலாம். திருப்பராய்த் துறை ஒரு காலத்தில் பராய் மரங்கள் நிறைந்த துறையாக இருந்திருக்கும். பராய் மரத்தின் அடிமரமும், கிளைகளும் வெண்சாம்பல் பூசியதுபோலக் காணப்படும்.

பராய் மரத்தின் பெயர்களாக பசுநா, விட்டில், புக்கு என்ற பெயர்கள் சூடாமணி நிகண்டில் கூறப்பட்டுள்ளன. பராய்

மரத்தின் இலை சொரசொரப்பாக உள்ளதால் பசுநா என்றழைக்கப் பட்டது. இதன் இலையை மரத்துண்டுகளைத் தேய்ப்பதற்குப் பயன் படுத்துவதுண்டு, பராய் மரத்தை விட்டில் என்று அழைத்ததைக் கவனிக்க வேண்டும். இம் மரத்தின் பட்டை விட்டுவிட்டு உரிந்து காணப்படுமாதலால் விட்டில் என்றழைத்ததாகத் தெரிகின்றது. கன்னடத்தில் விட்டில் என்ற பெயர், 'மிட்லெ', 'மிட்லி' (Mitle) என்று வழங்குகின்றது. அறிவியலில் இம் மரத்தின் பெயர் Streblus asper என்பதாகும்.

———

நூற்றாண்டும் இனிதே காண்க!

[வேலூர். ம. நாராயணன் எம். ஏ.]

"விழுமியசெந் தமிழ்மொழிக்கு விழிகள் தந்த
வள்ளுவனார் வாழ்ந்தபோது வாழ்ந்தோ மில்லை;
இழித்துரைத்த வேந்தர்களின் தலையில் கற்கள்
ஏற்றிவைத்த சேரனைநாம் கண்டோ மில்லை;
அழிவில்லாத் திருக்குறளை உணர்வி லேற்றி
அஞ்சாமை துணிவதனை உடைமை யாக்கி
ஒழுக்கத்தை உயிராகக் கொண்டி லங்கும்
உயர்திரு.கி ஆ.பெ.வி யவரைக் கண்டோம்.

தமிழ்வளர்ப்போம் எனவுரைக்கும் பலரி டத்தும்
தமிழறிவின் பயன்விளைக்கும் உணர்வைக் காணோம்;
தகவுடைய தமிழ்த்தலைவர் பலரி டத்தும்
ஐயமில்லை! உணர்விருக்கும்; அறிவைக் காணோம்;
அமிழ்தனைய தமிழ்மொழியில் அறிவு மோங்கி
அதற்கேற்ப இனவுணர்வும் அகத்தில் தேக்கும்
தமிழறிஞர் மிகச்சிலர்தாம்; அவருள் பொன்னி
தீரத்தில் வாழுமிவர் 'முதல்வ' ராவார்!

ஏழடுக்க மாளிகைக்குச் சொந்தக் காரர்:
எப்பொழுதும் செல்வத்தில் மிதக்கும் சிலர்
ஏழையரின் நிலையுயர்த்தும் எண்ணத் தோடே
எண்பத்தைந் தாண்டுகளாய் வாழும் ஏந்தல்
கோழைக்கும் வீரமூட்டும் பெரும்பேச் சாளர்:
குழந்தைக்கும் அறிவூட்டும் நூலின் ஆசான்:
தோழமையால் நானிலத்தார் நெஞ்சில் வாழும்
தோன்றலவர் நூற்றாண்டும் இனிதே காண்க!"

ஆட்சிமொழிச் சிந்தனைகள்

[தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை

மகாகவி பாரதி நகர், சென்னை-600 039.]

16. HILL STATION

கொடைக்கானலுக்குச் செல்லுவோம் என்றோ உதகமண்டலத்திற்குச் செல்லுவோம் என்றோ சொல்லிவிட்டால் போதுமானது, குதித்தெழுந்து கூத்தாடுவோர் பலருளர். அழகிய அவ்வூர்கள் அனைவரையும் கவர்ந்திழுக்கும் பான்மையனவாகப் பாங்குடன் திகழ்கின்றன. இவற்றிற்கு ஆங்கிலத்தில் ஒரு பொதுப்பெயர் இருக்கிறது. அதுதான் Hill station என்பதாகும்.

புதிதாக ஒருவருடன் பழகுகின்றோம். அவருடைய அன்பை அறிந்துகொள்கின்றோம். ஒத்த கருத்துடையவர் என்பதை உணர்ந்துகொள்கின்றோம். அதன்பிறகு அவரிடம் அன்பாகத் ''தங்கள் இருப்பு எங்கே உள்ளது?'' என்று வினவுகின்றோம். ''இருப்பு'' என்பது ''இருக்குமிடம்'' அல்லது ''இருப்பிடம்'' ஆகும். இருப்பிடத்தை ஆங்கிலத்தில residence என்று சொல்வார்கள்.

''இருப்பு'', ''இருக்குமிடம்'', ''இருப்பிடம்'' என்னும் ஒவ்வொரு சொல்லுக்கும் உங்கள் மனத்திலே பாடல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கும் என்று கருதுகின்றேன்! இம்மூன்று சொற்களுள் நடுநாயகமாக விளங்கும் ''இருக்குமிடம்'' என்னும் சொல்லை இனிதாகப் பயன்படுத்திக் காட்டியுள்ளார் பட்டினத்தடிகள். அருமையான அந்தப் பாட்டினை ஒருமுறை சொல்லிப் பார்ப்போம்.

> "இருக்கும் இடம்தேடி என்பசிக்கே அன்னம்
> உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன்—பெருக்க
> அழைத்தாலும் போகேன் அரனே என்தேகம்
> இளைத்தாலும் போகேன் இனி''

என்று மனமுருகப் பாடுகின்றார் பட்டினத்தடிகள்.

''இருப்பு'' என்னும் சொல் சில சமயங்களில் ஓர் ஊரையே குறிக்கும். ''வத்திராயிருப்பு'', ''வாண்டையார் இருப்பு'' என்று வரிசையாகப் பல பெயர்களை எடுத்துக்காட்டலாம். ''இருப்பு'' என்னும் சொல்லே ஓர் ஊரைக் குறிக்கும்போது, ''குடியிருப்பு'' என்னும் சொல் ஓர் ஊரைக் குறித்து நிற்பதில் வியப்பேதுமில்லை.

சென்னை மாநகரம், மாக்கவி பாரதி நகரில் அமைந்துள்ள தமிழ் ஆய்வு மன்றத்திலே Hill station என்பதற்கு ஏற்ற மொழிபெயர்ப்பு என்ன என்பது குறித்துக் கலந்தாய்வு நடத்தினோம். பல உறுப்பினர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். எழில் சொட்டும் மொழிபெயர்ப்புகளை எடுத்துக் கூறினர். இக் கட்டுரையைப் படிப்போரும் பங்கேற்றுப் பரிந்துரை செய்யவேண்டும்

என்னும் நோக்கத்தில், மன்ற உறுப்பினர்கள் தந்த மொழியாக்கங்களையெல்லாம் ஈண்டுத் தொகுத்துக் கூறுகின்றேன். குன்று இல்லம், குன்றுவாழிடம், குன்றிடம், குன்றுவாழ் குடியிருப்புகள், மலைவாழ்வகம் என்பனவாகும் அவை. குன்றக்குடி, குறிஞ்சிப்பாடி என்னும் பெயர்களும் கலந்தாய்வில் இடையிடையே களிநடம் புரிந்தன. இவை தமிழ்மொழியின் இனிமையை மட்டுமல்லாமல், தமிழின் வளமையையும் வகையாகக் காட்டுகின்றனவன்றோ?

உங்கள் பரிந்துரைகள் விரைவில் கிடைக்குமென்று கருதுகின்றேன். அதற்கிடையில் என் கருத்துகளை நான் தொடர்கின்றேன்.

நம் முன்னோர்கள் இந்நிலவுலகை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் பெயருடன வழங்கிவருகின்றன. இவற்றுடன் ''பாலை'' என்னும் பிரிவையும் சேர்த்துக்கொண்டால், இந்த நிலவுலகு ஐந்து பெரும் பகுதிகளாக அமைகின்றது. மலையும் மலைசார்ந்த இடமும் ''குறிஞ்சி'' எனப்படும் என்பதை மழலைப்பருவத்திலேயே நாம் பயின்றுள்ளோம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்கின்ற மலரினைக் ''குறிஞ்சி மலர்'' என்று குறிக்கின்றோம். எங்கள் நகரிலே வாழும் தமிழார்வமிக்க நண்பர் ஒருவர் தம் மகளுக்குக் ''குறிஞ்சி'' என்னும் பெயரைச் சூட்டியுள்ளார். நல்ல தமிழ்ப் பெயரை நாவார இசைப்பதில் ஏற்படும் மகிழ்ச்சிக்கு எல்லை ஏது?

''குறிஞ்சி'' என்னும் பெயரின் அழகிலே ஒன்றிவிட்டபின்னர், பொருத்தமான மொழிபெயர்ப்பு என்பது இனிமேல் ஒரு சிறு விளையாட்டுத்தான்!

அகராதிப் பொருளைப் பகராது விடுத்தல் தவறுகுமன்றோ? Hill station என்பதற்கு அகராதி தரும் சீரிய விளக்கம் a village or government post (as in India) situated in the hills or low mountain ranges and serving usually as a health resort in the hot season என்பதாகும். A village situated in the hills என்பது மையக் கருத்தாக அமைந்து, மயக்கம் தீர்க்கும் மாமருந்தாகப் பொலிகின்றது.

சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பவர்கள் ''மலைவாழிடம்'' என்று தெரிவித்துள்ளார்கள். இதனை ஆங்கிலத்தில் literal translation என்று கூறுவதுண்டு. இதை விடுத்து literary translation, அதாவது இலக்கிய மொழிபெயர்ப்பு, ஒன்றைச் செய்து பார்க்கலாமே! ஆம். அதுதான் ''குறிஞ்சிக் குடியிருப்பு'' என்னும் நறுந்தமிழ்த் தொடராகும்.

Hill Station = குறிஞ்சிக் குடியிருப்பு.

பாரதியின் புதிய ஆத்திசூடியில் சமுதாய விழிப்புணர்வு

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்ப்பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை]

(முன் இதழ் ௫க ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெண்ணடிமை தீர்தல்:

பெண்ணிற்குப் பெருமை தந்த நாடு இந்த நாடு. அம்மையப்பனாகச் சிவபிரானைத் தொழுத செந்நெறி கண்ட திருநாடு. பெண்பாற் புலவர்கள் பலரும் சங்கப் பாடல்கள் எண்ணற்றவற்றைப் பாடியுள்ளனர்; பெண்கல்வி இருந்திராவிட்டால் அத்தகு பெரும் புலவர்கள் தோன்றியிருக்க முடியுமா? முற்காலத்தும் இடைக்காலத்தும் இருந்த பெண்ணின் பெருமை பிற்காலத்து மறக்கப் படலாயிற்று; பெண் வீட்டிற்கு அரசியாக இருந்த காலம் மறைந்து வீட்டிற்கு அடிமையாக ஆக்கப்பட்ட காலமும் வந்தது; ஆண் மகனுக்குத்தான் பேரின்ப உலகமாகிய வீடுபேறு கிட்டும் என்றும் பெண்ணிற்கு முத்தி இன்பமே இல்லை என்றும் சமய உலகம் கூறும் அளவிற்குப் பெண்ணடிமை பெருகிற்று; திருவள்ளுவன், ஆண் பெண் இருபாலரையும் குறித்தே ''மக்கட்பேறு'' என்ற அதிகாரத்தைக்கூடப் ''புதல்வரைப் பெறுதல்'' என்று மாற்றுகின்ற அளவிற்கு இந்த அறியாமை நீடித்தது; அறுபத்து மூன்று நாயன்மார்களிலும், ஆழ்வார்களிலும் பெண்பாலர் இடம்பெற்ற நிலைமாறி இத்தகைய அவலநிலை வந்தது; உண்மைச் சிந்தனையாளர் இந்த நிலையைக் கண்டிக்கத் தவறவில்லை; சமுதாயத்தில் இந்த இழிநிலையை மாற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப் பாரதி முனைந்தான்; 'புதுமைப் பெண்' 'பெண்விடுதலை' போன்ற தொடர்கள்—பாரதி வகுத்த கொள்கை விளக்கக் கவி ஓவியங்கள் மக்களைச் சிந்திக்கத் தூண்டின. 'சரிநிகர் சமானமாக'ப் பெண்ணைச் சாற்றிப் புகழ்ந்து சரித்திரம் படைத்துவிடுகிறான் இந்தப் புதுமைக் கவிஞன். சட்ட அடிப்படையில் வளர்ந்துவந்த பெண்ணுரிமை உணர்வு பாரதி பாடல்களில் முழுவடிவம் பெற்றுவிட்டமையைக் காண்கின்றோம்.

நிவேதிதா அம்மையாரின் தொடர்பும், அமெரிக்கப் புதுமைக் கவிஞன் வால்ட் விட்மன் கருத்துகளும், பாரதிக்கு இந்தச் சிந்தனையை வலுப்படுத்தின என்பர் ஆய்வாளர். பெண்விடுதலை ஏற்பட்டாலன்றி நாட்டு விடுதலைபெற இயலாது என்று நிவேதிதா அம்மையாரால் பாரதி உணர்த்தப்பெறுகின்றான். பழைய காலத்தில் இருந்த பெண்ணின் பெருமை—இடைக்காலத்தில்

முடக்கப்பட்ட நிலை மாறி, மீண்டும் மறுமலர்ச்சி பெறவேண்டுமென்று பாட்டுகள் புனைந்து உறுதிப்பட உரைக்கின்றான் பாரதி.

"பெண்ணே தெய்வம் அன்னை கடவுள்
பெருமை என்று பேசுகின்றான்!
பெண்கள் பேதைகள் என்றும் பீடைகள்
என்றும் மறுநாள் அவனே ஏசுகின்றான்.

என்று மாறிவிட்ட மனிதனைக் கவியரசு கண்ணதாசன் பிற்காலத்தில் அடையாளம் காட்டுகின்ற கருத்துக்குப் பின்புலமே பாரதி அல்லவா?

"விடுதலைக்கு மகளிரெல்லோரும் வேட்கை
கொண்டனம்; வெல்லுவம் என்றே
திட மனத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்துநாம் பிரதிக்கினை செய்வோம்!
உடையவள் சக்தி ஆண்பெண் இரண்டும்
ஒருநிகர் செய்துரிமை சமைத்தாள்!
இடையிலே பட்ட கீழ்நிலை கண்டீர்!
இதற்குநாம் ஒருப்பட் டிருப்போமோ?"

என்று கூவிக் குரல் கொடுத்தான் இப் புத்துலகக் கவிஞன்.

"பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!—
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா!"

என்று களிக்கூத்தும் கவிக்கூத்தும் ஒருசேர நிகழ்த்தியவன் கைகுவித்து வணங்குகின்றான்:

"போற்றிதாய் என்று தாளங்கள் கொட்டடா!
போற்றிதாய் என்று பொற்குழல் ஊதடா!"
"வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா!
மானம்சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்!
கலியழிப்பது பெண்கள் அறமடா!
காதலின்பத்தைக் காத்திடு வோமடா!"

என்று விரதம் பூணுமாறு வற்புறுத்துகின்றான்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்!
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி!"

என்று பெண்கள் கும்மியாகவே பாடி மகிழ்விக்கின்றான் பாரதி.

"கற்புநிலை என்று சொல்லவந்தார்—இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்!
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"

என்று கற்பை ஆண் பெண் இரு பாலருக்கும் பொதுவாக்கும் திறம் நம் பெருங்கவிஞனுக்கன்றி வேறு யார்க்கு வரும்?

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்!
ஞான நல்லறம், வீரசுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்!
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டிரோ"

என்று,—அச்சம், நாணம் இரண்டு பண்புகளும் போதும்; புதுமைப் பெண்ணிற்கு ஞானம், அறம், சுதந்திரம் ஆகிய பண்புகள் வேண்டும் —எனப் புது இலக்கணம் வகுக்கின்ருன் நம் பெருங்கவிஞன்! 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்" என்று ஆணித்தரமாகப் பாடும் பாரதியின் வீரக்கவிதைகளில்' புதுமைப்பெண் பூத்துப் பொலிகின்ருள்!

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

என்று பாவேந்தனும், புதுமைப்புலவன் பாட்டையிலேயே தன் கொள்கை விளக்கம் குறிக்கின்ருன்!

"அருளுக்கு நிவேதனமாய், அன்பினுக்கோர்
கோயிலாய், அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிருய் எமதுயர்நா டாம்பயிர்க்கு
மழையாய் இங்கு
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப் பெரும்பொருளாய்
புன்மைத் தாகச்
சுருளுக்கு நெருப்பாக விளங்கியதாய் நிவேதிதையைத்
தொழுதுநிற்பேன்"

என்று நிவேதிதா தேவியார்க்கு 1905 ஆம் ஆண்டிலேயே வணக்கம் பாடி அந்த அம்மையார் வகுத்துத்தந்த நெறியிலே தன் நினைவு களைக் கவிப் பின்னல்களாக்கிப் புதுநடை போடுகின்ருன். பெண் விடுதலை வேண்டும் என்ற பாரதியின் ஆழ்ந்த கோட்பாடே, ஆத்திசூடியில்,

"தையலை உயர்வுசெய் !"

என்ற தொடராகத் திகழ்கின்றது. சமுதாய விழிப்புணர்வுக்கு அச்சம் நீங்குவதும், அடிமைத்தனம் அகல்வதும், குறிப்பாகப் பெண்ணடிமை போவதும் அடிப்படைகள் என்ற கருத்துடைய இப் புதுயுகப் புலவனுக்குத் தொட்ட இடம் எல்லாம் அந்த உணர்வுகளே தலைதூக்குகின்றன.

தொழில்வளம் பேணல்:

இனிச் சமுதாய உணர்விற்குத் தொழில்வளம் பெருக வேண்டும் என்ற அடிப்படையில் பாரதி தந்திருக்கும் கருத்துகள் உயர்வானவை; இயந்திர வளர்ச்சிகள் பாரதி கண்டறிந்தவை; உழவு அவனறிந்த பழந்தொழில். மேலைநாடுகள் இயந்திரமாட்சி பெற்று எழுச்சிமிகுந்த பொருளாதார பலம்பெற்றுப் புதுப் பொலிவும் வனப்பும் அடைந்து நிற்றலை அறிவுக்கண் கொண்டு காணும் நம் கவிஞன், ஆத்திசூடியில் புதுநீதி ஒன்றைச் சூத்திரமாக வடிக்கின்றான், எப்படி?

"கூடித் தொழில் செய்!"

என்று, தொழில்வளம் பெருகவேண்டும் என்றும் அதுவும் கூட்டுறவு அடிப்படையில் செழிக்கவேண்டும் என்றும் கருதுகின்ற பாரதியின் எண்ணங்கள், வறுமைப்பட்டுக்கிடந்த இந்திய சமுதாயத் திற்கு வளமான வாழ்வு அமைந்திட எழுந்த 'இமாலயக் கருத்துகள்' என்றால் மிகையன்று.

"கூடித் தொழில் செய்" என்று அறிவுறுத்தியவன், "கைத்தொழில் போற்று" என்று கைத்தொழில் வளம் பெருக்க வேண்டும் எனவும் நெறிப்படுத்துகின்றான். "உழவுக்கும் தொழி லுக்கும் வந்தனை செய்த" அதே வேளையில், "வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்" என்று தன் இயல்பான உணர்விற்கு விளக்கமும் தருகின்றான். பாரதி விரும்பும் தொழில் வளத்தை அவனது பாரததேசப் பாட்டு விரிவாக்கித் தருகிறது:

"பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்!
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்!
காசினி வணிகருக்கு அவைகொடுப்போம்!"

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்!
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்!
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்!
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்!"

குடைகள், உழுபடைகள், கோணிகள், இரும்பாணிகள், நடையும் பறப்பும் உணர் வண்டிகள், ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள், எனப் பல பொருள்களைச் செய்யும் தொழில்கள் பெருக எண்ணுகின்றான் நம் பெருங்கவிஞன்! அனைத்தையும், விண்வெளி ஆய்வைக்கூடச் "சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்" என்று சுட்டி இறுதியாக, 'உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம்!" என்று முற்றுப்பு வைக்கின்றான்; இத்தகு தொழில்வளம் பாரத

சமுதாயத்தின் வறுமையை விரட்டும்; உலக நாடுகளினிடையே நிமிர்ந்து நிற்கச் செய்யும் என்று கருதுகின்றான். அதனாலேயே தன் நாட்டு மக்களுக்குத் தொழில்வளம் காக்குமாறு கட்டளை இட்டு, விழிப்புணர்வை ஊட்டி வீறுகொண்டு எழச் செய்கின்றான். ''பணத்தினைப் பெருக்கு!'' என்ற ஆத்திசூடித் தொடரை இத் தொழில்வழிப் பெருகும் பொருளாதார வளத்தைக் குறித்ததாகவே கொள்ள வேண்டியுள்ளது. எதற்கு எடுத்தாலும், பிற நாட்டை நோக்கிக் கையேந்தி நிற்கும்நிலை மாறினால்தான், தன்னிறைவுத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றினால்தான் இந்த நாடு நாடாகும் என்பது நம் புத்துலகக் கவிஞனின் உட்கோளாக இருத்தல் வேண்டும்!

> ''நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
> நாட வளந்தரு நாடு''

என்ற தெய்வப் புலவன் திருநாட்டுக் கற்பனையை நன்கு தெளிவாகக் கற்றவனல்லவோ நம் பாரதி!

நாடு விடுதலை பெற்றபின், தன்னிறைவுத் திட்டங்கள் பலவற்றை ஆற்றி, ஆறுவது ஐந்தாண்டுத் திட்டம்வரை வளர்ந்துள்ள நாம் இன்று பிறநாடுகள் நம் நாட்டிலிருந்து பல பொருட்களை வாங்குகின்ற அளவிற்கு உயர்ந்துள்ளோம் என்பது பெருமைப்படத் தக்க ஒன்றாகும்; அதே வேளையில் இந்தச் சிந்தனையை நம் சமுதாயத்திற்கு அன்று ஊட்டியவன் நம் அருங்கவிஞன் என்பதை மறந்திடக் கூடாது. வறுமையிற் கிடந்து உழல்வது கூடாது என்பான் பாரதி! ''மிடிமையில் அழிந்திடேல்!'' என்பது பாரதியின் ஆத்திசூடி! வறுமையை மேற்கொள்ளும் தொழில்களால் முயற்சிகளால் விரட்டியடிக்க வேண்டும் என்பது பாரதிக் கோட்பாடு.

> ''இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
> நிலம்என்னும் நல்லாள் நகும்''

என்பான் பொதுமறைப்புலவன். முயற்சி செய்யாமல்—வறுமையை நீக்கும் வகைதுறைபற்றிச் சிந்தனை செய்யாமல், 'நான் வறுமை உடையவனாய் இருக்கிறேன்', 'நான் வறுமை உடையவனாய் இருக்கிறேன்' என்று ஒருவன் புலம்பிக்கொண்டிருந்தால் எப்படி? வறுமை அந்தப் பெட்டைப் புலம்பலால் ஓடிவிடுமா? உழைக்க வேண்டும்; தொழில்களில் முயற்சி செய்ய வேண்டும்; அப்போது தான் வறுமையை விரட்டி அடிக்கலாம் என்று பாரத சமுதாயத்திற்குப் பாடம் புகட்டுகின்றான். மிடிமையில்—வறுமையில்—மனம் அழிந்திட வேண்டாம் என்பதன் அடிப்படைப்பொருள் இதுவேயன்றோ? பாரதநாட்டு மக்களின் நீண்டதூக்கம் கலைய வேண்டும் என்பதற்குப் பாரதி எடுத்துக்கொண்ட பல்வேறு கருத்து

களில், 'வறுமையொழிப்பிற்குத் தொழில் வளம் காணல்' என்ற ஒன்று முடிமணியாக அமைவது என்பதை மறந்துவிடக்கூடாது

கடும் உழைப்பு வேண்டும்:

இவ்வளவு வளர்ந்துவிட்ட பின்னும், உலக அரங்கில் வளர்ந்து விட்ட பின்னும், விண்வெளி ஆராய்ச்சி முதலிய துறைகளில் மேலை நாட்டினரோடு போட்டியிடுமளவிற்குக் கலை வளர்ச்சி கண்ட பின்னும், செயற்கைக் கோள்கள் பலசெய்து உலக அறிவியலாளர் புருவங்கள் உயருமாறு செய்த பின்னும், நம் சமுதாயம் கடினமான உழைப்பை மேலும் கைக்கொள்ள வேண்டும் என்றன்றோ நம் தலைவர்கள் எடுத்துரைத்து வருகின்றனர்! 'சிரமம் ஏறு ஜெயதே'— கடும் உழைப்பே வெல்லும் என்பதன்றோ நம் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா அம்மையார் நமக்கு இன்று வழங்கியுள்ள புதிய மந்திரம்! ''வானநூற் பயிற்சி கொள்'' என்றும், ''வையகத் தலைமை கொள்'' என்றும் பாரதி வழங்கும் ஆத்திசூடித் தொடர் களையும் இந்த அடிப்படையில்தான் நாம் நோக்குதல் வேண்டும்!

(தொடரும்)

———

தமிழகக் கல்லூரிகளில்
தாமரைத்திரு. வ. சுப்பையா பிள்ளை நினைவு நாள்

கழக மேனாள் ஆட்சியாளர் தாமரைத்திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள் நினைவு நாள் சென்னையில் 6—10—83ல் நடைபெற்ற போது தலைமை வகித்த தமிழக அறநிலைய, செய்தித்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஐயா அவர்களின் அரிய பதிப்புப் பணியையும் பல்வகையான பிற தமிழ்ப் பணிகளையும் பாராட்டி அவர்தம் தொண்டு இன்றைய இளைஞர்கட்கும் தெரியும் வகையில் தமிழகக் கல்லூரிகள் அனைத்திலும் அவர்கள் நினைவு நாள் கொண்டாடப்பெறுதல் வேண்டும் என்று உரையாற்றினார். அதன் தொடர்பாக, இச் சிறப்புக் கூட்டங்களை நடத்த அரசு முடிவு செய்து, 18—3—83ல் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதன் மெய்ப்படி கல்லூரிக் கல்வி இயக்குநரவர்கட்கும் கல்லூரிப் பேராசிரியர்கட்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதில் உள்ள செய்தி வருமாறு:

"சென்னை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியர் மறைந்த திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் அரிய தொண் டினைச் சிறப்புற விளக்கும் வகையில் கல்லூரிகளில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து நடத்தும் சிறப்புக் கூட்டங்களை நடத்து மாறு முதல்வர்களுக்கு அறிவுரை வழங்கலாகிறது. கல்லூரிகள் விடுமுறைக்காக மூடியிருப்பின் விடுமுறைக்குப்பின் கல்லூரி திறந்த தும் கூட்டத்தை நடத்துமாறு அறிவுரை வழங்கலாகிறது.''

நா. அனந்தபத்மநாபன்
கல்லூரிக் கல்வி இயக்குநருக்காக.

மிடற்றெலியியல்

[முனைவர் வி. ப. கா. சுந்தரம், மதுரை.]

(முன் இதழ் ௬௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

5 : 4. ஒன்றெனத் தாக்கல் :

இசைக்கு இன்றியமையாததும் ''ஒன்று'' என நிற்பதும் எது?— அடிப்படைக் குரலாகிய ஒத்து. (ஆதார சுருதி) அடிப்படைக் குரலாகிய ஒத்து ஒலியைக் கொண்டுதான், பிற ஆறு இசைநரம்பொலிகளும் எழுகின்றன. இசையோன் பாடுதற்குமுன், வாயைத் திறத்தற்கு முன் மகரத்தை 'ம்' ஒலித்துக் கேள்விகூட்டிக் கொள்வான்.

''மகரத்தின் ஒற்றுல் சுருதி விரவி''

என்பது (உ. வே. சாமிநாதைய. சிலப். ப. 104) சிலப்பதிகார மேற்கோள்வரி.

ஒவ்வொருவருக்கும் குரல்வளையமைப்பு வேறுவேருக அமைந்துள்ளமையால் தத்தமக்கு எனக் கேள்விக் கூட்டொலியைக் (சுருதிக் கட்டையை) கண்டுபிடித்து அமைத்துக்கொள்ளல் வேண்டும். ஆடவர்க்குக் குரல்நாண் இடைவெளி சுமார் அரை அங்குலமிருக்கும் என்றும், பெண்டிர்க்கு அது சற்றுக் குறைந்த அளவினது என்றும் ஆக்சுபோர்டு பல்கலைக்கழக இசையகராதி கூறும். எனவே, பெண்டிரின் கேள்விக்குக் கூட்டொலி 4-6 கட்டைவரையும் ('ம' முதல் 'நி' வரை) அமையும்; ஆடவர்க்கு 1-3 வரை ('ச-'க') அமையும்.

அடிப்படைக் கேள்விக்கூட்டொலி ஒருவர்க்கு எது?

ஒருவரால் எந்த அடிப்படைக் கோவையினின்றும் (ஆதார சட்சம்) மெலிவு மண்டிலத்தில் (மந்தார ஸ்தாயியில்) நான்கு கோவைகளும் (ச நி த ப), வலிவு மண்டிலத்தில் மூன்று கோவைகளும் (ச ரி க) இயற்கையாக, கடினப்பாடின்றி ஒலிக்க இயலுமோ அந்தக் குரற்கோவையே அவர்க்கு அடிப்படைக் கோவை (ஆதார சட்சம்). இதனை ''மெலிவிற் கெல்லை உழை குரலான மந்தம்'' எனவும் ''வலிவிற் கெல்லை வன்றைக்கிளையே'' என்றும் கூறியதனுல் கொள்ளலாம் (சிலப். 8.27 அரு...உரை). எனவே ''ஒன்றெனத் தாக்கல்'' என்ற சிலம்புவரியால்—ஒருவர்க்குரிய ஒரே குரற்கோவையைக் கண்டுபிடித்து அதிலேயே குரல் பயிற்சி செய்தல் வேண்டும் என்பது தெரியவருகிறது.

5 : 5. இரண்டெனப் பகுத்தல்:

தென்னகப் பாடல்களைப் பாடுங்கால் குரல் ஒலி வலிவு மண்டிலத்தில் (தாரஸ்தாயி) மூன்று கோவைகள் வரையும், மெலிவு மண்டிலத்தில் நான்கு கோவைகள் வரையும் ஒலிக்கும். அவை யாவன மெலிவில் 4, சமனில் 7, வலிவில் 3 கோவைகள் வரை குரல் ஒலி இறங்கி ஏறி இசைத்தல் வேண்டும். எனவே 4—7—3 = 14 கோவைகள் வரை குரல் ஒலிக்கு எல்லை கொண்டனர். சிலர்க்கு வலிவு மண்டிலத்தில் 4, 5 கோவைகள் வரை இசைக்க இயலும். இத்திறம் தனித்திறம். இதை விடுத்து 14 கோவைகளே குரல் ஒலிப்பு எல்லையாகப் பண்டையோர் கொண்டனர் எனலாம். இவ்வாறு கொண்டதைப் பின் வரும் வரிகள் தெளிவுறுத்துகின்றன.

> "வலிவும் மெலிவும் சமனும் எல்லாம்
> பொலியக் கோத்த புலமையோன் —(சிலப். 3 : 93-4)

> "மூவகை இயக்கமும் முறையுளிக் கழிப்பி" —(சிலப். 8 : 42)

> "உழைமுதல் கைக்கிளை இறுவாய் கட்டி
> வரன்முறை வந்த மூவகைத் தானத்து" (சிலப்.)

> "மெலிவிற் கெல்லை மந்தக் குரலே"

என்றும்,

> "வலிவிற் கெல்லை வன்கைக் கிளையே"

என்றும் கூறியவைகளினின்றும் 14 கோவைகள் வலி, மெலி, சமன் எனும் மூவகைத் தானங்களிலும் பரந்து இயங்குவன என்றும் பாடுங்கால் இவ்வாறியங்கும் குரல் வளம் பெறுதல் வேண்டும் என்றும் அறியலாகும். இன்றைய சுரங்களில் விளக்குவோம்.

4 — 7 — 3 —14

ச் ரிக்

ச ரி க ம ா த நி

ம ப த நி
. . . .

........7 ....7 ...14

இனி "ம ப த நி சரிக" எனும் 7 கோவைகட்குக் குரல்வழி முதலிய தசைநார்கள் ஒரு நிலையில் உள்ளன; பின்னர் "ம பதநி

ச்ரிக்'' எனும் 7 கோவைகட்கும் குரல் ஒலிப்புக் கருவிகள் ஒரு நிலையில் உள்ளன என்பதை இன்று கண்டுள்ளனர். இரண்டாம் 7 கோவைகளை ஒலிக்குங்கால்—குரல் தசைநார்கள் சற்றுச் செறிவும் இறுக்கமும் பெறுகின்றன; மேலும் மூக்கொலியும் கலக்கப் பெறுகின்றன. எனவே குரல் ஒலிப்புத் தசை நார்களின் இளகிய நிலை—ஒரு பகுப்பு; இறுகிய நிலை மற்றோர் பகுப்பு. இவ்வாறு ''இரண்டு எனப் பகுத்தல்'' இன்றியமையாத பகுப்புகளாகும்.

இனி ''இரண்டெனப் பகுத்தல்'' என்பதற்குக் கோவை ஒலிப்புக்குரிய இயக்கமும் பாடற்சொற்களின் ஒலிப்பு இயக்கங்களும் என இருவகைகளாகப் பகுத்தலும் பொருந்தும். இவ்விரு பொருளும் குறித்த தொடராகவே கொள்ளல் சிறப்பாகும். இனி அடுத்த குரல் ஒலிப்புத் தலைப்பைக் காண்போம்.

5 : 6. பண்ணீர்மைகளைப் பிறப்பித்தல் :

பண்ணீர்மைகள் எவை? அவற்றை இடம் கருதிச் சுருக்கமாகச் சுட்டுவோம்.

1. பண்ணிற்குரிய ஏறுநிரல் இறங்குநிரல் ஓசைகள்—ஆரோசை, அமரோசைகள்.

2. வெகுளல் பற்றுமைபூணல், இரங்குதல், இகழ்தல், புகழ்தல் முதலிய தொழில்களைப் புலப்படுத்தப் பாடுதலே—நிறம் தோன்றப் பாடுதல். இதனை, ''இராக பாவம்'' என்பர். இவற்றைப் புலப்படுத்தும் முறைகள் எவை? பண்டை இசையியலார் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் எட்டுவகைத் தொழிலால் புலப்படுத்துதல் என வகுத்துள்ளனர். (சிலப். 3 :)

3. மேலும் ஒவ்வொரு பண்ணிற்கும் உரியவைகள்—கிழமைக் கோவைகள் (ஜீவசுவரங்கள்) நிறுத்தற் கோவைகள், இணை, கிளை, நட்புக் கோவைகள், பகைக் கோவைகள் முதலியவைகள்.

4. ஒலிவேற்றுமைகளை உண்டாக்கும் ஒலி உறுப்புகளை எட்டு எனப் பழந்தமிழிசையோர் பகுத்தனர். அவற்றைப் ''பெருந்தானம் எட்டு'' என்றனர். தானத்தைப் 'பெரும்' என்ற அடைமொழியால் சுட்டியதனால் சிறுதானங்களும் உண்டு எனக் கொள்ளுதல் வேண்டும். பெருந்தானங்கள் : நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணுக்கு, உதடு, பல், தலை என்பன. இப் பெருந்தானம் ஒவ்வொன்றும் தனித்தும் ஒன்றிரு தானங்கள் இணைந்தும் ஒலிவேற்றுமைகளையும் நயம்பட உண்டாக்குகின்றன. ஒலிப்

பிறப்பின் ஆக்கம் நுண்ணிய செயல்களால் அமையும். எண்பெருந் தானத்தில் ஒலித்தல், மூலாதாரத்து மூச்சு எழுப்புதல், வளியை (காற்றை) மிடற்றுட்செலுத்தி ஒலித்தல் முதலியவை சிலம்பில் கூறப்பட்டுள்ளன. இவற்றைத் தொல்காப்பியரும் கூறுவதால், அவர் காலத்திற்கும் முன்னிருந்தே மிடற்றெலியியல் நூன்முறை இருந்தமை அறியலாகும்.

6 : 1. தொல்காப்பியம் கூறும் ஒலியியல் செயல்கள் :

தொல்காப்பியம் எட்டு ஒலி உறுப்புகள் கூறுகின்றன.

1. தலை, 2. மிடறு, 3. நெஞ்சு, 4. பல், 5. உதடு, 6. நாக்கு, 7. மூக்கு, 8. அண்ணம்—இவை எட்டும் ஒலி உறுப்புகள் என்கிறார்.

இவை எட்டுள், நாக்கு, உதடு, அண்ணம், பல், மூக்கு—ஆகிய ஐந்தையும் ஒருதொகுதியாக்கினர்; ஏன்? இவை அசைந்து இயங்குவன. நாவின் இயக்கங்கள் : 1. நாக்கு அண்ணத்துடன் சென்று பொருந்துதல், 2. பல்லடியில் சென்று பொருந்துதல் (பல் முதல் மருங்கின்), 3. நுனிநா படர்ந்து மேனோக்கிச் சென்று பொருந்துதல் (அணரி ஒற்றல்) தடவுதல் (வருடுதல்) 4. நாவிளிம்பு வீங்கிப் பல்லடியை வருடுதல் முதலியன. இனி முறையே ஒலிப்புறுப்புச் செயல்களைக் காண்போம்.

1. உந்தியில் காற்றை (வளியை) மேனோக்கித் தள்ளுதல் (உந்துதல்.)

"உந்தி முதலா முந்துவளி தோன்றி"

என்றார் தொல்காப்பியர்.

2. மிடற்று வலியால் பன்னீர் உயிர் பிறப்பன.
3. அங்காப்பால்—'அ. ஆ.'
4. அண்பல் முதல்நா விளிம்புற—"இ, ஈ. எ. ஏ. ஐ"
5. உதடு குவிவதால்—உ. ஊ. ஒ. ஓ.
6. முதல் நா, இடைநா, நுனி—இவ்விட அண்ணமுற—முறையே க, ங,—ச, ஞ,—ட, ண.
7. உதடு ஒட்டுவதால்—'ப. ம.'
8. உதடு பல்லுடன் ஒட்டுவதால்—'வ'.
9. மூக்கின் வளியால்—மெல்லினம்.
10. பரந்து மேனோக்கி எழும் நுனிநா அண்ணம் ஒற்ற—ற,ன.
11. நுனிநா அண்ணம் வருட—ர, ழ.
12. நாவிளிம்பு வீங்கிப் பல்லடியை ஒற்ற—'ல'; வருட—'ள'.

6 : 2. இவற்றால் இசையியலுக்கு அறிவன :

இசை ஒலிகள் எழுவதை இசை காட்டுவன :

அங்காப்பாலும், மூக்குவளி இசைப்பதாலும், நாக்கு இயங்கி —வாய்க் கூரையைச் சிறிது பெரிது ஆக்குவதாலும் உதடு குவிவதாலும், மிடற்றுவளி இசைப்பதாலும், உரலாணிபோல் நாக்கு செறித்து ஒட்டுவதாலும்—இசை ஒலிகள் எழுகின்றன. வேறு ஒரு கருத்தும் சொல்லுதல் வேண்டும். இவையெல்லாம் மிடற்றுப் பாடற் சொல்லொலிகளை இசைப்பதற்கும், நுண்ணிய ஏழிசைகளை இசைப்பதற்கும் கூறிய ஒலி உறுப்பு இயக்கங்களாகும். "உந்து முதலா முந்துவளி தோன்றி" என்றும் 'அகத் தெழு வளி இசை' என்றும் தொல்காப்பியமும், 'நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப' என நன்னூலும் "மூலாதாரத்துத் தொடங்கிய மூச்சைக் காலாற் கிளப்பிக் கருத்தால் இயக்கி" எனச் சிலம்புரையிலும் (3 : 26) கூறப்படுவதனால்—அடிவயிற்றெலியின் தோற்றம் சிறப்பு வற்புறுத்தப்பட்டன.

———

ஆசிரியர்க்குக் கடிதம் :

தமிழ் ஒலிபரப்பில் தமிழ்த் தேதி சொல்ல மறுப்பதேன்?

அனைத்திந்திய வானொலி நிலையத்தார் நாள்தோறும் தில்லியிலிருந்து, தென் கிழக்கு ஆசிய நேயர்களுக்காகக் காலையில் தமிழ் நிகழ்ச்சிகளை (I. S. T. 6-30 A M—6-15 A. M ஒலிபரப்பி வருகிறார்கள். அனைத்திந்திய நாட்காட்டி (காலண்டர்), ஆங்கில வருடம், மாதம், தேதிகளை மட்டுமே சொல்லி வருகிறார்கள். தமிழ் ஆண்டு, மாதம், தேதிகளைச் சொல்வதே இல்லை. தில்லி நிலையத்தாருக்கும், இந்தியத் தலைமை அமைச்சருக்கும் மைய ஒலிபரப்பு—செய்தித் துறை அமைச்சருக்கும், தமிழக முதல்வர்க்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும், மற்றும் இந்திய நாடாளுமன்றத் தமிழ் உறுப்பினர் பலருக்கும், சென்னைச் சட்டமன்றத் தலைவருக்கும் பல கடிதங்கள் எழுதியும் தக்க பயன் கிடைக்கவில்லை. தில்லி ஒலிபரப்புத் துறை அமைச்சர் எழுதிய பதிலில்—இந்திய ஒருமைப்பாட்டைக் காண்பித்துப் பொருந்தாக் காரணங்கள் கூறித் தமிழ்த் தேதியைச் சேர்த்துக்கொள்ள மறுக்கிறார். தென் கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பஞ்சாங்கம் கிடைப்பதில்லை. அதை முன்னிட்டாவது, தில்லி வானொலி நிலையத்தார், தமிழ்த் தேதியையும் சேர்த்துக் கூறவேண்டும். தமிழ்த் தேதியைச் சேர்த்துக்கொள்வதால் இந்திய ஒருமைப்பாடு வளருமே தவிரக் குறைவுபடாது என்பதை அமைச்சர் உணரவில்லை போலும்! தமிழருக்காக ஒலிபரப்பும் நிகழ்ச்சியில் தமிழ்த் தேதியைக் கூற மறுப்பது வியப்புக்குரியதாகும். தமிழ் மக்கள் யாவரும் இதை வற்புறுத்தி ஆவன செய்து உதவ வேண்டுகிறேன்.

இரங்கூன்
19—9—'83

—காந்தி அண்ணாமலை.

தமிழைப் படி !

[மன்றவாணன்]

[மன்றவாணன்]

தமிழைப் படி—கன்னித்
தமிழைப் படி !

வையம் வாழும்படி
வழங்கும் உண்மைபடி
ஐயம் நீங்கும்படி
அனைத்தும் ஊன்றிப்படி
இதயம் களிக்கும்படி
இன்பம் ததும்பும்படி
நிதியம் பெருகும்படி
நல்லோர் புகழும்படி

தமிழைப் படி—கன்னித்
தமிழைப் படி !

இலக்கியத் திரளைப்படி
ஈரடிக் குறளைப்படி
ஒலிக்கும் சிலம்புபடி
ஒண்டமிழ் விளங்கும்படி
சிந்தா மணியும்படி
சேக்கிழார் தமிழும்படி
முந்தையர் போற்றும்படி
முத்தொள் ளாயிரம்படி

தமிழைப் படி—கன்னித்
தமிழைப் படி !

பத்துடன் எட்டும்படி
பெருமை எட்டும்படி
சொத்தென நினைத்துப்படி
சாத்தனர் நூலும்படி
கம்பன் கவியும்படி
காப்பியன் கருத்தும்படி
வம்பன் திருந்தும்படி
விளங்கும் பாரதிபடி

தமிழைப் படி—கன்னித்
தமிழைப் படி !

———

• தமிழ் எழுத்து—சில சிந்தனைகள்

[வெ. கோவலங்கண்ணன், AAIA, AMSA
முதல்வர், சிங்கப்பூர் வணிகக் கல்விச்சாலை.]

அண்மைய காலங்களில், முதுபெருந் தமிழ் அறிஞர்கள் ஒருவர்பின் ஒருவராக மறையத் தொடங்கியதும், தமிழ் படிப்பதால் என்ன பயன் என்று இதுகாறும் சொல்லித் திரிந்த திடீர்த்தமிழ்ப் பற்றுளர்களும், ஆங்கிலம்போல் நந்தமிழ் மொழியின் எழுத்துகளைச் சுருக்கிவிட்டால் தமிழ் தரணி எங்கும் தழைத்தோங்கும் என்றும், இல்லாவிடின் மறைந்தொழியும் என்றும் துணிந்து பொய்சொல்லி வருகிறார்கள்.

ஆங்கிலம் எழுத்துச் சுருக்கத்தால் உலகெங்கும் பரவியதா? அல்லது படை பலத்தால் உலகெங்கும் பரப்பப்பட்டதா? என்று இந்த அறிஞர்களைக் கேட்க விரும்புகிறேன். ஆங்கிலேயரின் ஆட்சி பல நாடுகளில் நிறுவப்பட்டதால் ஆங்கிலம் உலக மொழியாகப் படிப்படியாக வளர்க்கப்பெற்றதேயன்றி, அதன் எழுத்துச் சுருக்கத்தாலன்று என்னும் வரலாற்று உண்மை நாமெல்லாம் அறிந்த ஒன்றாகும். உண்மை இவ்வாறு இருக்க ஆங்கிலம் 26 எழுத்துகளைக் கொண்டு உலகை ஆள்கிறது. நாமும் எழுத்தைச் சுருக்கிக் கொண்டால் உலகை ஆளலாம் என்று நினைப்பது ஆய்வடிப்படையில் அறிவுக்குப் பொருந்தாததாகும். நாம் எழுத்துகளைச் சுருக்கிக்கொண்டால் தட்டச்சுகளில் தொலையச்சு, கணினி போன்ற கருவிகளை எளிதில் தமிழில் படைத்துக்கொள்ளலாம் என்றும் பறைசாற்றுகின்றனர்.

இக்கருவிகளைத் தமிழில் படைப்பதற்குத் தடையாக இருப்பது எழுத்தின் எண்ணிக்கையன்று, பணத்தோடு கூடிய தமிழர்களிடம் இக்கருவிகளை வாங்கும் வேட்கை இன்மைதான். இதுதான் அடிப்படைப்பொருளியல் நமக்குக் கற்பிக்கும் பாடம். இன்று தமிழில் ஆயிரம் கணினிகள் வேண்டும் என்று சப்பானியர்களிடம் அதற்குரிய பணத்தையும் கொடுத்துக் கேட்போமானால் ஒரு மாதத்திற்குள்ளாக இக் கருவிகளை, நம் தமிழ் எழுத்துகள் எல்லாவற்றையும் ஓர் ஊசி முனைக்குள் வைத்துச் சிறிய அரிய கணினிகளைப் படைத்துத் தந்துவிடுவார்கள். இஃது இவ்வாறு இருக்க எழுத்தைச் சுருக்கிக் கொண்டால் தமிழில் கணினி, தொலையச்சு மற்றும் புதுமைக் கருவிகள் படைத்துவிடலாம் என்று கூறுவது நடையன் அளவுக்குக் காலைக் குறைத்துக்கொண்டால் நாம் விரைந்து நடக்கலாம் என்று சொல்லுவதையே ஒக்கும்.

•28—8—1983ல் நடைபெற்ற சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை ஆய்வரங்கத்தில் ஆற்றிய கருத்துரையின் சுருக்கம்.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித் தன்மை உள்ளது. அதன் தனித் தன்மைக்கு ஏற்ப ஒலி அமைப்பும் அமைந்திருக்கும். உலகில் எந்த மொழியும் மற்றொரு மொழியின் ஒலிகளை அந்த மொழிக்குரிய தெளிவு சுழிவோடு ஒலிக்கமுடியாது என்னும் உண்மையைப் பல மொழிகள் வழங்கும் சிங்கப்பூரில் வாழும் நாம் நன்கு அறிவோம். 'தமிழ்' என்பதை 'டமில்' (Tamil) என்றும் 'மாங்காய்' என்பதை 'மெங்கோ' (Mango) என்றும் 'அரிசி' என்பதை 'ரைஸ்' (Rice) என்றும் வழங்குகிறார்களே அல்லாது தமிழின் மொழிமரபுக்கு ஏற்ப ஒலிக்கவேண்டும என்று எந்த ஆங்கிலேயரும் சொல்லுவதில்லை: அப்படியே சொன்னாலும் ஆங்கிலத்தால் நம் ஒலிமுறையைப் பின் பற்ற முடியாது.

'இன்றுள்ள தமிழ் எழுத்துகள் காலந்தோறும் பலவாறு மாறி வந்திருககின்றன என்றும், மாறுதல் என்பது எல்லாவற்றுக்கும் இயற்கை என்றும் இக்காலத்திற்கு ஏற்ப நம் எழுத்துகளை மாற்றிக் கொள்ளுவதுதான் அறிவுடைமை என்றும் சொல்லுகிறார்கள். மாந்தன் தாயின் வயிற்றில் கருவுற்றுப் பத்து மாதங்கள் படிப் படியாய் வளர்ந்து, குழவியாக இவ்வுலகில் பிறந்து தொடர்ந்து படிப்படியாக வளர்ந்து கட்டிளங் காளையாகிறான். அதன்பின் தந்தையாகிறான், தாத்தாவாகிறான். இவைபோன்ற இயல்பான மாற்றங்களைத்தான் இதுவரை தமிழ் கண்டுள்ளது. இது இயற்கை என்று நாமும ஒப்புக்கொள்ளுகிறோம். இதைப்போன்ற இயல்பான மாற்றங்களைக் கண்டு யாரும் அஞ்சியதில்லை. இதை விடுத்து மாற்றம் ஒன்று வேண்டும். புதுமை காணவேண்டும் என்னும் வேட்கையால் நம் எழுத்துகளைச் சுருக்க எண்ணுவதைவிட வேறு அறியாமை என்ன இருக்க முடியும்?

இனி, தற்போதுள்ள தமிழ் எழுத்துகளில் சீர்திருத்தம் என்னும் பெயரால் மாற்றங்கள் செய்தால் நாம் எவ்வகை இழப்புகளுக்கும்— இடர்களுக்கும் ஆளாவோம்.

நாம் தமிழர்கள், நமக்கு என்று ஒரு தனிப்பெரு மரபு, வரலாறு உண்டு என்னும் உண்மையை இதுகாறும் நிலைநாட்டி வந்துள்ளவை யாகிய நம் தனிப்பெருஞ் சொத்து, சங்ககால இலக்கண, இலக்கியங் களாகும். எழுத்துச்சீர்மை என்னும் பெயரால் எழுத்து மாற்றங்கள் செய்வோமேயானால் தேடுதற்கரிய இச் செல்வங்களை முற்றாக இழந்து விடுவோம். நாம் மரபு அற்றவர்கள் ஆக்கப்படுவோம். இதன் விளைவு, தமிழர் பண்படாத ஒரு விலங்காண்டி இனத்தைச் சேர்ந் தவர்கள் என்று தந்தை பெரியார் கூறிய கூற்று மெய்ப்பிக்கப்படுவ தாகும். இத்தோடு, தமிழுக்கு எழுத்து வடிவம இருபதாம் நூற் றாண்டுவரை இருந்ததில்லை, வெள்ளையர் ஆட்சிக்குப் பின்தான் தமிழர் படிப்படியாகப் பண்பட்டனர் என்னும் கொள்கையைத்

தமிழையும் தமிழினத்தையும் அழிக்க எண்ணியுள்ள பகைவர் நிலை நாட்டிவிடுவார்கள்.

பண்டைய தமிழர்கள் தங்கள் கருத்துகளையும் எண்ணங்களையும் பிறரிடம் தெளிவாக எடுத்துச்சொல்ல, நம் தாய்மொழியாம் தமிழில், பல்லாயிரக்கணக்கான அருந்தமிழ்ச் சொற்களைப் படைத்துக்கொண்டனர். இதற்குரிய சான்றுகள் சங்க நூல்களிலும் திருக்குறளிலும் மற்றும் பிறநூல்களிலும் காணக்கிடக்கின்றன.

ஆனல், சங்க காலத்திற்குப்பின் அயலார் வருகையாலும், பகைவர் சூழ்ச்சியாலும், தமிழ் அரியணையிலிருந்து இறக்கப்பட்டது; இதன் விளைவாகத் தமிழின் வளர்ச்சி தடைப்பட்டதோடல்லாது, பதினெட்டாம் பெருக்கன்று நூல்களை ஆற்றில் எறிதல் போன்ற பகைவரின் சூழ்ச்சியாலும் பல அருந்தமிழ் நூல்கள் அழிக்கப்பட்டும் உள்ளன. இதனுல் நாடகம், கட்டிடக்கலை, மருத்துவம் மற்றும் பல துறைகளைச் சேர்ந்த சொற்களும் ஆற்று நீரில் நீரோடு நீராகக் கலந்து சென்றுவிட்டன.

பொற்காலமாம் சங்க காலத்திற்குப்பின் தமிழ் அரியணை இழந்தமையாலும் தமிழர் கோயில்களில், வீட்டுச் சடங்குகளில், தமிழுக்குப் பதிலாக அயன் மொழியைப் பயன்படுத்தத் தொடங்கியதாலும் படித்த தமிழர் அயல் மொழியில் தங்கள் கருத்துகளை எழுதத் தொடங்கித் தமிழைப் புறக்கணித்ததாலும் தமிழில் புதுப்புதுச் சிந்தனைகள், கருத்துகள், எண்ணங்கள் உருவாதல் இயலாது போயிற்று. இவ்வாறு புதிய சிந்தனைகள் தமிழில் தோன்ற வாய்ப்பு இல்லாது போகவே, புதிய உலகச் சிந்தனைகளைச் சித்திரிக்கும் செந்தமிழ்ச் சொற்கள் படைக்கப்படவில்லை. இதன் காரணமாகத் தமிழ் வளர்ச்சி முற்ருகத் தடைப்பட்டதேயொழிய அதன் எழுத்துகள் எக்காலத்தும் வளர்ச்சிக்குத் தடையாக இருந்ததில்லை. ஆதலால், தமிழ் வளர, தமிழில் இக்கால அறிவியல், பொருளியல், தொழிலியல், மின்னணுவியல் மற்றும் பலதுறை அறிவுச் செல்வங்களைத் தமிழில் செம்மையாகவும திண்மையாகவும் நுண்மையாகவும் எடுத்துச் சொல்லிட நாம் புதுப் புதுக் கலைச்சொற்களைப் படைத்துக் கொண்டோமானல் நந் தாய்த்தமிழ் தளர்வு நீங்கி வளரும், வாழும். இல்லையேல் படிப்படியாக மறையும். எழுத்துக்குறைப்பு தமிழைத் திண்ணமாக வாழ வைக்காது. ஆகவே, தமிழினை வளர்த்திட உடனே பல்துறைக் கருத்துகளைத் தெளிவாகத் தமிழில் எடுத்துச் சொல்லிடச் சொல்வளததைப் பெருக்க வேண்டுமேயல்லாது எழுத்துக் குறைப்பு என்னும் வேண்டாச் சிறு செயலில் தங்கள் பொன்னுன நேரத்தை வீணக்க வேண்டாமென்று தமிழறிஞர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

———

பேராசிரியர் மு. ரா. பெருமாள் முதலியார் அவர்கட்குத் தமிழ்ச் சான்றோர் பட்டம்

சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும், தமிழ் வளர்ச்சித் துறையின் முன்னாள் இயக்குநரும், கல்வித்துறைத் துணை இயக்குநரா யிருந்து ஓய்வுபெற்றவரும், சீரிய தமிழ்த் தொண்டரும் 27-7-67ல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத் தின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களால் தமிழ்ப் பெரும் புலவர் என்னும் பட்டம் வழங்கப்பெற்ற வருமான, உயர்திரு. மு ரா. பெரு மாள் முதலியார், பி. ஏ. (ஆனர்சு) எல். டி. அவர்கட்கு 8-10-83ல் சேலத்தில் முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர் களின் கதிர் விழா என்னும் (85ஆம் ஆண்டு) பிறந்தநாள் விழாவும், அவர் தோற்றுவித்த தமிழ்ப்புலவர் குழுவின் வெள்ளி விழாவும நடைபெற்றபோது, முத்தமிழ்க் காவலர் அவர்களால், 'தமிழ்ச் சான்றோர்' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்றது.



திரு. முதலியாரவர்கள் 1967 ஜூலை 27ஆம் நாள் முதல், சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கிலத்திற்கு ஈடாகத் தமிழே பயிற்சி மொழியாக (அஃதாவது பி. எட். பட்ட மேற்படிபபு ஆசிரியப் பயிற்சி வகுப்பில்) இருக்கவேண்டும் என்று அண்ணா அவர்களின் அறிவிப்பைச் செயல்படுத்திக் காட்டியவர் என்பதும் அதனாலேயே இவர்கள் அண்ணா அவர்களால் 'தமிழ்ப் பெரும் புலவா' என்னும் பட்டத்தினைப் பெற்றார் என்பதும் குறிப்பிடத் தக்கவை.

மற்றும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றபோது அறிஞர் அண்ணா அவர்கள், திரு, பெருமாள் முதலியார் அவர்களை மாநாட்டுப் பொதுக்குழுவின் சிறப்பு அலுவலராக (Special officer) அமர்த்திச் சிறப்பித்தமையும் குறிப்பிடத்தகக செய்தியாகும்.

இத்தகைய சிறப்புகட்குரிய இப்பெரும் புலவரவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்ற இறைவன் அருள்புரிவானாக.

செய்திகள்

தமிழ் 'கா. சு.' நினைவு இலக்கிய 19-வது ஆண்டுவிழா

பல்கலைப்புலவர் தாகூர் சட்ட விரிவுரையாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல். அவர்களின் 96-வது பிறந்தநாள் விழாவும் இலக்கியக் குழுவின் 19-ஆவது ஆண்டு விழாவும் இந் நவம்பர்த் திங்கள் 12, 13ஆம் நாள்களில் குழித்தலை காவிரி நகர் அறிஞர் அண்ணா சமுதாயக் கூடத்தில் நடைபெறுகின்றன.

இவ் விழாக்களையொட்டிச் சிந்தனையரங்கம், பாட்டரங்கம், பட்டி மண்டபம், வழக்குரை மன்றம், சங்கப்பலகை, திரு. வி. க. நூற்றாண்டு கண்காட்சி விழா, தமிழ்ச் செல்வங்கள் காணல், யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்கு நூல்கள் வழங்கு விழா, சித்தாந்த ஆய்வரங்கம், பாராட்டுப் பட்டயம் வழங்குதல், இளமுருகு பொற் செல்வி கல்வி அறக்கட்டளைப் பரிசு, திருக்குறள் கட்டுரைப் போட்டிப் பரிசு, பாராட்டு நன்மங்கலம் வழங்கல் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகளும் தக்கார் தலைமையில் நடைபெறுகின்றன.

13-11-83இல் நடைபெறும் பாராட்டுப் பட்டயம் வழங்கு விழாவில் திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, தவத்திரு அடிகளார் தலைமைதாங்க, முதுபெரும் புலவர் மாமணி தண்டபாணி தேசிகர் அவர்கட்கு "உரைவளத் திருவள்ளுவர்" என்னும் பட்டம் வழங்கப்பெறும். கழக ஆட்சியர் நூலக வித்தகர் உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி எம். ஏ., பி. லிப். அவர்கள் பாராட்டுரை வழங்குவார்கள். மற்றும் அறிஞர் பலர் உரை யாற்றுகிறார்கள்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய மன்ற விழாக்கள்

டாக்டர் மா. இராசமாணிக்கனார் இலக்கிய மன்றத்தின் சார்பில், திருச்சி தமிழ்ச்சங்க மன்றத்தில் 23-10-83 ல் "செந்தமிழ்ச் சோலை" நூல் வெளியீட்டு விழாவும், கவிஞர் திலகம் திருச்சி பரதனுக்குப் பாராட்டுவிழாவும் இராசமாணிக்கனார் இலக்கிய மன்றத்தின் சொல்லாற்றல் போட்டியில் வென்றவர்கட்குப் பரிசளிப்பு விழாவும் முறையே நடைபெற்றன.

மரு. இரா. கலைக்கோவன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, பேராசிரியர் இரம்போலா மாஸ்கரேனஸ் அவர்கள் தலைமைதாங்க மரு. வி. ஜெயபால் அவர்கள் 'செந்தமிழ்ச் சோலை' நூலை வெளியிட்டார். திரு. ஈ. ச. சுந்தரமூர்த்தி அவர்கள் முதல் நூலினைப் பெற்றுக்கொண்டார். திரு. இளசை சுந்தரம் அவர்கள் பாராட்டுரை வழங்கினார். கவிஞர் திலகம் திருச்சி பரதன் ஏற்புரை நிகழ்த்தினார்.

அடுத்து, சொல்லாற்றல் போட்டியில் வெற்றி பெற்றவர்கட்கு திரு. சா. பெரியசாமி அவர்கள் பரிசுகள் வழங்கினார். திரு. கு. தாமோதரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

திருச்சி தமிழ்ச் சங்கம், டாக்டர் இராசமாணிக்கனார் இலக்கிய மன்றம், உய்யக்கொண்டான் இளைய அரிமாக்கள் மன்றம் ஆகியன இணைந்து வழங்கவிருக்கும், மாதந்தோறும் மருத்துவச் சொற்

பொழிவுத் தொடக்க விழாவினை மரு. அர. கணேசன் அவர்கள் தொடங்கிவைத்தார்கள்.

பேராசிரியர் மு. சதாசிவம் அவர்களது ஐரோப்பியப் பயணம்

இங்கிலாந்தில் உள்ள எக்சிடர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உலக அகராதி மாநாட்டில் செப்டம்பர் 9 முதல் 12 வரை கலந்து கொண்ட கழக நூலாசிரியருள் ஒருவரும் பன்மொழிப் புலவரும் ஈரோடு வாசவி கல்லூரிப் பேராசிரியருமான மு. சதாசிவம் அவர்கள் பிரான்சு, மேற்கு செருமனி, கிழக்கு செருமனி, சுவிட்சர்லாந்து ஆகிய பல நாடுகளுக்கும் சென்று பல தமிழ்ச் சங்கங்களிலும், ஈழத் தமிழர் கூட்டங்களிலும் சொற்பொழிவுகளாற்றினர். உலகிலேயே அதிகமான அகராதிகள் தொகுத்தவர் என்ற சிறப்பை உலக அகராதி மாநாட்டில் பெற்ருர். பாரிசில் பெரியார்—திரு. வி. க. நூற்ருண்டு விழாக்களிலும், தமிழீழ விடுதலை மாநாடுகளிலும் கலந்துகொண்டு உரையாற்றினர். பெர்லின் தமிழ்ச் சங்கத்திலும் சொற்பொழிவாற்றினுர். இங்ஙனம் தேமதுரத் தமிழோசையை உலகெங்கும் பரவச் செய்து தாயகம் திரும்பியுள்ள பேராசிரியர் மு. சதாசிவம் அவர்களைப் பாராட்டுவதோடு அவருடைய இலக்கியப்பணி மேலும் வளர்க வாழ்க என்றும் வாழ்த்துகிரோம்.



திரு. பொ. மணிவாசகனர் வாழ்க!

தமிழிசைச் செவ்வேள், உயர்திரு. திருச்சி பொ. மணிவாசகனர் அவர்கட்கு 25-10-83 ல் 81ஆவது அகவை நிறைவுற்ற செய்தியறிந்து பெருமகிழ்ச்சியடைகிரோம். அவர்கள் மேலும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ்ந்து நூற்ருண்டு விழாவும், பிற சிறப்புகளும் பெற்று வாழ எமது உளமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிரோம்.

ஆசிரியர்.

மறைமலையடிகள் நூலக வளர்ச்சிக்கு நன்கொடை

(சிலம்பு ௫௮, எகூஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் (கழக ஆட்சியர்)	10	00
திரு. ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள் (கழக மேலாளர்)	5	00
செல்வி இல. சுப்பையா கோமதி	5	00
கயப்பாக்கம் திரு. முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள்	5	00
திரு. A. T. A. ஈஸ்வர் அவர்கள்	5	00
திருமுருக விசாக நம்பி அவர்கள்	5	00
சூரன்குடி திரு. அ. ஆறுமுகம் அவர்கள்	5	00
கல்லை கே. கண்ணன் அவர்கள், ஆசிரியர், வள்ளுவர் வழி	10	00

மதிப்புரை

பண்ணைப் பராமரிப்பும் மேலாண்மையும் (Farm Management)

[ஆக்கியோர்: ரா. அனந்தபத்மநாப பிள்ளை, பி. எசி., (வேளாண்.) ஓய்வுபெற்ற வேளாண்மைத்துறைத் துணை இயக்குநர். நடுத்தெரு. சீவைகுந்தம். நெல்லைமாவட்டம், பக்கங்கள் 600, விலை ரூ. 30-00.]

''உழுவார் உலகத்தார்க்கு ஆணி'' என்ருர் வள்ளுவர் பெருந்தகை. ஏனெனில், உழவு செய்து வாழமுடியாத பெரும் பான்மை மக்களை வாழ்விக்க வேண்டியவர்கள் உழவுதொழில் செய்வோரே ஆவர். உழவுதொழில் அத்துணைச் சிறப்புடையது. இதனை விளக்க 'உழவு' என்றே ஓர் அதிகாரம் வகுத்துள்ளார் வள்ளுவர். அவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளுக்கு விளக்கந்தரும் வகையில் அமைந்துள்ளது, ''பண்ணைப் பராமரிப்பும் மேலாண்மையும்'' என்னும் இந்நூல்.

பொதுவாக எத்துறையினைப்பற்றியும் நூல் எழுதுவோர் அத்துறையில் தேர்ந்த பட்டறிவு பெற்றவராதல் வேண்டும். இந்நூலினை எழுதிய திரு. அனந்தபத்மநாப பிள்ளை அவர்கள் இவ்வுண்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிருர். இவர் வேளாண்மை ஆராய்ச்சித்துறையில் பல்லாரி மாவட்டம் சிறுகுப்பா என்னுமூரில் பண்ணைப் பராமரிப்பாளராக இருந்து, அத்துறையில் சிறந்த பட்டறிவினைப் பெற்றவர். மற்றும், குண்டூர், சித்தலதேவி, ஓசூர், கால்நடைப் பண்ணை இயக்குநராகவும் கோவை மத்திய வேளாண்மைப் பண்ணை மேலாளராவும், பவானிசாகர் காந்திக் கிராமம் ஆகியவிடங்களில் வேளாண்மைத்துறை நிறுவனங்களின் முதல்வராகவும், தமிழக அரசு வேளாண்மைத்துறைத் துணை இயக்குநராகவுமிருந்து பல்துறைப் பட்டறிவு கைவரப்பெற்றவர் களாவர். இந்நூலில் இந்நூலாசிரியரின் அத்துணைப் பட்டறி வினையும் பரவலாகக் காணலாம்.

பண்ணைப் பராமரிப்புக்குரிய அடிப்படைத் தத்துவங்கள் அனைத்தும் இந்நூலில் இடம் பெற்றிருப்பதால், இது பண்ணையார் களுக்கும், வேளாண்மைத் துறையினர்க்கும், வேளாண்மைக் கல்வி ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் பாடப் புத்தகம் எழுதுவோர்க்கும் பெரும் பயன் விளைக்கும் என நம்புகிருேம். இந்நூலாசிரியரின் முயற்சி வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது.

வள்ளலார் பெருமையும் சுத்த சன்மார்க்க விளக்கமும்

[ஆசிரியர்: சன்மார்க்க நன்மணி, வெ. இராஜப்பா. 'வள்ளலார் நிலையம்', 8, தம்பையாசாலை விரிவு, மேற்கு மாம்பலம், சென்னை-33, பக்கங்கள் 296+12 ரூ. 23-00]

தமிழகத்தில் தோன்றிய இறையன்பர்களுள் ஒருமையுடன் இறைவன் திருவடிகளை நினைந்த உத்தமரும், அன்பு-அறிவு-அடக் கங்களால் உயர்ந்தவரும், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய அருள் உள்ளத்தினரும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத ஒழுக்க சீலரும், இவை அனைத்துக்கும் மேலாக மதமான

பேய்பிடித்தலையாது, கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப் போகவேண்டும் என உரைத்த 19ஆம் நூற்றுண்டின் சீர்திருத்தச் செம்மலுமானவர் வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாராவார். அவர்தம் பெருமையினை விரிக்கின் பெருகும். எனவே, வள்ளலார் பெருமையினையும் அவர் பரப்பிய சுத்த சன்மார்க்கக் கொள்கைகளையும் விளக்கும் இந்நூலினைச் சுத்த சன்மார்க்கத்தினை விழையும் அன்பர்கள் அனைவரும் படித்தறிதல் இன்றியமையாததாகும். இந்நூலாசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

விஞ்ஞானமுறை ஜோதிடம்

[ஆசிரியர்: சோதிட பூஷணம் யோகி. என், இராஜன், C. A. D. Y. திருச்செந்தூரான் பதிப்பகம், A. P. 1347, 7-வது பகுதி, 33-வது தெரு, கே. கே. நகர், சென்னை-600 078. விலை: ரூ. 6-50.]

சோதிடம், கைரேகை, ஆரூடம் இவற்றின் மூலம் தம்முடைய எதிர்காலத்தைப் பற்றி அறிந்துகொள்ள மக்கள் விழைவது இயல்பு. அதிலும் இன்றைய சூழ்நிலையில் ஊழ் நிலையை அறிந்துகொள்ளும் வேட்கை மிகுந்து காணப்படுகின்றது. இந்நிலையில் யோகி என். இராஜன் அவர்கள் எழுதியுள்ள 'விஞ்ஞானமுறை ஜோதிடம்' என்னும் இந்நூல் வான சாத்திரத்தையும் இணைத்துக் கவர்ச்சியாக எழுதப்பட்டுள்ளது. இதில் "சோதிடத்தை அறிந்துகொள்ள 60 விதிகள்" முதல் "அமாவாசை பௌர்ணமி விளக்கம்" ஈருக 29 தலைப்புகளில் 12 இராசிகள் பற்றியும், இலக்கினம் நிற்குநிலை பற்றிய செய்திகளும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. சோதிடம் கற்க விழைவோர்க்கும், கற்ற சோதிடத்தை எளிதில் பயன்படுத்த விழைவோர்க்கும் இந்நூல் நன்கு பயன்படும் என நம்புகிறோம். பதிப்பு முறையும் பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளது.

வரப்பெற்றோம்

திருத்தணிகைப் பெருமான் வேண்டற் பதிகங்கள்.

காஞ்சிபுரம் தொண்டைட் மண்டல ஆதீனப் புலவர் பாவலர் நா. ப. தணிகை அரசு, செயலர் வா. தி. மா. மு. கல்வி நிறுவனங்கள், வாலாசாபாத், 631 605.

கவிதை மலர்க்கொத்து

நான்காம் ஆண்டு விழாமலர். தொகுப்பு: வே. இராசவேலன், இல. அண்ணாமலை. வாழியூர் கம்பன் கழக வெளியீடு. ரூ. 1/-

பாளையங்கோட்டை தேவி திரிசூலி மாரி கழல் போற்றும் கவிக் கோவை

தொகுப்பு: நெல்லை மாவட்ட இந்து தமிழ்க் கவிஞர் மன்றச் செயலாளர் கவிஞர் கு. ஆறுமுகம்.

தென்னிந்திய தமிழ்ச் சங்கத்திற்காக
80, பிரகாசம், சாலை, சென்னை, அப்பர் அச்சகத்தில்
திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: இரா. முத்துக்குமாரசாமி, எம். ஏ., பி. லிப்.

கழகப் புதிய வெளியீடுகள்

தமிழ் (சொற்பொருள் வரலாறு) ஆசிரியர்: கழக இலக்கியச்செம்மல், புலவர் இரா. இளங்குமரன்	7	50
தமிழ்த்தாய்ப் பிள்ளைத் தமிழ்—கவிஞர் பேகன்	5	00
திருவாசகத் தேனமுதம்—மா. சன்முகசுப்பிரமணியம், பி. ஏ., பி.எல்	22	00
பாலாற்று வளம் —புலவர்கோ. தி. நா. அறிவு ஒளி, எம்.ஏ., எம்.எட்.	12	00
மன இயலும் மணவாழ்க்கையும்—ரெவரெண்ட் சத்திய சாமுவேல் [திருமணப் பரிசுக்குரிய அரிய நூல்]	12	00
மன இயலும் குழந்தை வளர்ப்பும்—ரெவரெண்ட் சத்திய சாமுவேல் குழந்தை வளர்ப்பு பற்றிப் பெற்றோர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய பல அரிய செய்திகள் அடங்கிய நூல்.	7	50

கழக நிலையங்களில் கிடைக்கும் பிற பதிப்பாளர்களின் புதிய வெளியீடுகள்

சேதுமுதல் சிந்து வரை (மனித இன ஆய்வு) —எம். கே. ஈ. மவ்லானா	25	00
அன்னை மொழியும் ஆட்சித்துறையும் —தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை	5	00
புதிய ஆத்திசூடி—புலவர் இரா. முருகையன்	4	90
மூன்று சக்கரங்கள்—கே. ஏ. அப்பாஸ்	7	90
பாரதி ஒரு வாழ்நெறி—தி. ச. ராஜி	12	50
திருமாலின திருஅவதாரங்கள்—மாருததாசன், எம்.ஏ.	11	00
காஞ்சி காமாட்சி—அ. அறிவொளி	9	00
ரத்தம் சரணம் கச்சாமி—கவிஞர் மணிமொழி	4	50
சேதுபந்தனம்—கௌதம நீலாம்பரன்	15	00
இடைவெளிகள் தொடர்கின்றன—வாசந்தி	9	00
நெஞ்சில் நிறைந்த முகம் தாமரை செந்தூர்பாண்டி	9	00
அன்பு வேணுமா அன்பு—ரா. கணபதி	17	20
பூமியைச் சுமக்கும் வானங்கள் - இ. முத்துராமலிங்கம்	6	50
நிலாக்காலத்து மயக்கங்கள்—ஆர். ஈ. சந்திரசேகர்	7	50
தினம் ஒரு குறள்—பி. சி. கணேசன்	15	00
பாஞ்சாலி சபதம் பாடிய பாரதி - ராஜம் கிருஷ்ணன்	32	00
சூரிய வம்சம்—சா. கந்தசாமி	17	00
Kamaraj and his Secrets of Success —Palayam M. Balasundram	19	50

திரு. இல. செ. கந்தசாமி எழுதியவை

கிராமத்து ஓவியங்கள் (புதினம்)	8	00
போர்வைகள் (புதினம்)	6	00
மனையியல் நோக்கில் குடும்ப நலம்	6	00
சித்திரைக் கனி (புதினம்)	8	00
இதுவோ நாகரிகம்?	6	00
அன்றும் இன்றும் இனியும் (வேளாண்மை)	10	00
,, ,, ,, (தோட்ட வளம்)	12	00
,, ,, ,, (கால்நடை வளம்)	12	00
,, ,, ,, (வேளாண்மை பொறியியல்)	8	00

அப்பர் அச்சகம், சென்னை-108.